உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 4 } 1905௵ ஜூலை௴ { புத்தகம் 7.

வித்தை XII.

(முன் தொடர்ச்சி).

தொழிற்பாடசாலைகளைப்பற்றிப் பேசுவதாக முன் சஞ்சிகையிற் கூறினேம். இது விஷயத்தில் நாம் கவர்ன்மெண்டாரைப்பற்றி மாத்திரம் குறைகூறுவதிற் பயனில்லை. நம் கனதனவான்களையும் சிறிது குறைகூறவேண்டும். நம்மவர் தம் கடமைகளைச் சரிவரக் கவனித்துக் கவர்ன்மெண்டாரையும் அடிக்கடி அவர்கள் கடமைகளைச் செய்யச்சொல்லித் தூண்டிவந்தால் நலமாயிருக்கும். ஒற்றுமையாய் உழைத்தாலொழிய இக்காரியம் நிறைவேற இடமில்லை. தாதா என்பவரைப்போன்ற தனிகர்கள் இலட்சக்கணக்காய்ப் பொருள்கொடுத்துதவினும் புத்திமான்கள் இதுவிஷயத்தில் நீளநினைந்து யோசனை செய்து நம் ஜனங்களுக்கு இன்றியமையாத தொழில்களை ஆரம்பம் செய்யாவிடில் பிரயோஜனம் இல்லை. ஆனால் இதுவிஷயத்தில் நம்மவர் ஞாபகம்வைத்துக்கொள்ளவேண்டிய முக்கிய விஷயம் சில உள. முதலாவது மேற்றேசங்களுக்கும் நம் தேசத்துக்கும் நடையுடை பாவனைகளில் எவ்வளவோ வித்தியாசங்களிருக்கின்றன. ஆகையால் அத்தேச முறைகளையே நாம் பின்பற்றுவது பொருந்தாது. வேண்டுமானால் இதுவிஷயத்தில் அத்தேச அனுபவங்களை நாம் அறிந்து நம் தேசத்துக்குத் தக்கவண்ணம் உபயோகிக்கலாம். சிலர் ஜப்பான் தேசத்தையே அடிக்கடி உபமானம் எடுத்துக்காட்டி

நாமும் உழைத்தால் கூடிய சீக்கிரம் அவர்களைப்போல் ஆகிவிடலா மென்று நினைக்கிறார்கள். அவ்வாறு நினைப்பது சரியாகாது. அவர்கள் தேசத்துக்குரிய செளகரியங்கள் நமக்குக்கிடையா. நாம் அந்நிய இராஜாங்கத்திலிருந்துகொண்டு சொந்த இராஜாங்கத்தில் நடக்கக்கூடிய விஷயங்களைப் பேசுவதில் காரியம் இலகுவில் முடியுமா? நமக்கு எது சாத்தியமோ அதை நம்முயற்சியால் முடித்துக்கொள்ளலாம். நம்முயற்சித்தாழ்வே நமக்குப்பெருங்கேடு. பணமில்லை பணமில்லையென்று சொல்வது வழக்கமாக இருக்கிறது. பலர் ஒத்து உழைத்தால் பணம் பெரிதா? சொற்பம் சொற்பமாய்க் கொடுத்தாலும் பலதுளி பெருவெள்ளமாமே. கோஆபரேடிவ் ஸொஸைட்டி என்ற ஐக்கியச்சங்கங்கள் ஏற்பட்டுச்சரிவர வேலைசெய்யும் பக்ஷத்தில் பணத்துக்குப் பஞ்சமேது? ஊர்ஊராகப் பணம் பெருத்துப்போகாதோ? ஆகையால் பொதுஜன உபகாரவிஷயத்தில் இன்னும் பலர் முயற்சிசெய்து இவ்விஷயங்களைச்சீருக்குக் கொண்டுவர வேண்டும். ஒற்றுமை, நம்பிக்கை முதலிய விஷயங்கள் முன்போல் நம்மவர்க்குள் வேரூன்றவேண்டும். தக்க சாவகாசமுள்ள கனதனவான்கள் பொதுக்காரியத்தில் ஏற்பட்டு உழைத்து ஜனசெளக்கியத்தை விருத்திபண்ணவேண்டும். இவைகளெல்லாம் தக்கவண்ணம் கல்விப் பயிற்சியினாலேயே ஆகவேண்டியது. நம் நாட்டின் சுரங்கங்களில் அந்நியர் வேலைசெய்து பெருத்த இலாபமடைகிறார்கள். நம் பஞ்சாலைகளால் அந்நிய நாட்டாரே பெருத்த இலாபம் சம்பாதிக்கிறார்கள். அவ்விலாபத்தை நாம் அடையத் தடையென்ன? நம் நாட்டில் விளையும்படியான பருத்தியை நாம் நூற்று நூலாக்கி நெசவு செய்வதை அவர்கள் வேண்டாமென்கிறார்களா? தக்க படிப்பாளிகளை அந்நிய தேசங்களுக்கு அனுப்பித்தொழின்முறைகளைக் கற்றுவரச்செய்து நம் காரியத்தை நிறைவேற்றும்வரை ஜப்பானியர்கள் செய்தவண்ணம் அந்நிய தேசங்களிலிருந்து நமக்கு அவசியமான தொழிலாளிகளைத்தருவித்து வேலைகளை ஆரம்பித்து அவைகளில் நம்மவர்களைப்பழக்கித் தக்கவண்ணம் அவர்கள் சிலவருஷங்களில் தேர்ச்சியடைந்தபிறகு அந்நியர்களை விலக்கிக்கொள்ளலாம். எப்படியாயினும் நாம் இனித்தாமதிக்க முடியாது. நம் தேசம்படும் கஷ்டத்தை நீக்கவேண்டுமாகில் நாம் உடனே முயற்சிக்கவேண்டும். இரா

ஜாங்க சீர்திருத்த விஷயமாய் நாம் பட்டபாடு போதும். இனி அவ் விஷயத்தைச் சிலபுத்திமான்களே கவனித்தால் போதுமானது. ஜில் லாக்கள் தோறும் பொதுஜன அபிவிருத்தி சபை ஏற்பட்டு அச்சபை யில் ஜனசௌக்கிய விஷயங்களைப் பற்றி ஆலோசித்துத் தக்க ஏற் பாடுகள் செய்ய வேண்டும். முதல் முதல் அவர்கள் வித்தை விஷ யத்தில் கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். கைத்தொழில் விஷயமாகவும் சில ஐக்கியச்சங்கங்களை ஏற்படுத்தி நிதிதிரட்டிக் கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். ஒரு ஜில்லாவின் ஒருபுறத் தில் பஞ்சாலை ஏற்பாடு நடக்கலாம். மற்றோர் புறத்தில் கிருஷிக்கு வேண்டிய கருவிகள் செய்யப்படலாம். நம் நாட்டில் நூற்றுக்கு எழுபது பேர் கிருஷித்தொழிலில் உழைத்து வருகிறார்கள். அவர் களுக்குக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கலாம். கலப்பைகள், இறை சால்கள் முதலிய வியவசாய கருவிகள் செய்து சுலபமான விலைக்கு விற்கலாம். சில இடங்களில் மாடுகளைப் பரிபாலனம் பண்ணிச் சுல பமான விலைகளுக்கு விற்கலாம். சில வசதியான இடங்களில் எருச் சாமான்களைச் சேகரித்துக் கொடுத்துதவலாம். சில இடங்களில் ஜனங்களுக்கு இன்றியமையாத சில்லரைச் சாமான்களைச் செய்து விற்கலாம். இவ்வாறு செய்வதால் தொழில்களும் நடக்கும். ஜனங் களுக்கும் பிழைப்புண்டு. பணத்துக்கும் தக்க இலாபம் கிடைக்கும். யாதொரு மோசமுமில்லை. நாம் உட்கொள்ளுகிற உணவுப் பொருள் களும் நாம் உடுக்கும் உடையும் நாம் வீடுகளில் உபயோகிக்கும் சா மான்களும் நம் தேசசாமான்களாகவும் நம் கைத்தொழில் முயற்சி யாகவும் இருந்தால் நம்மனம் எவ்வளவு திருப்தியடையும்? நம் நாட் டுக்கும் எத்துணைக்ஷேமமுண்டு. மனிதன் ஜீவனத்துக்கு இன்றியமை யாத விஷயத்தைத் தவிர்த்துப்பின்னும் நமக்கு உபயோகமாகும் சில அரியவிஷயங்களில் நாம் பின்முயற்சி செய்யலாம். சிற்பம் அரிய தொழில் என்றாலும் ஜீவனத்துக்கு இன்றியமையாத விஷயமாகாது. ஆனாலும் ஜனங்களின் சுகவாழ்வுக்கு வேண்டியவிஷயமே. அவ்வா றான அரிய விஷயங்களிலும் நாம் முயன்றுவந்தால் அவைகளை அந் நியநாட்டாருக்கு விற்று முன்போல் பெருத்தலாபமடையலாம். இ வைகளையெல்லாம் புத்திமான்கள் நீளநினைந்து இவைகளை அபிவிரு த்தி செய்யத்தக்க ஏற்பாடுகளைச்செய்தல்வேண்டும். இவ்வாறானதொ

ழிற்சாலைகள் இல்லாக்குறைவால் நம் தேசத்து ஏழைக்குடிகள் அந்நியநாடுகளுக்குச் சென்று கஷ்டப்பட்டுக் கூலிசம்பாதிக்கிறார்கள். நம் தேசமோ விஸ்தாரமான தேசம். எல்லா வளங்களும் நிறைந்த தேசம். நம்முயற்சிக்குறைவால் நாம் அடையவேண்டிய பலாபலன்களை அந்நியர் அநுபவித்துவருகிறார்கள். நம் படிப்பாளிகள் தங்கள் புத்தியைக் கவரன்மெண்டுக்கு ஒப்புக்கொடுத்து ஊழியஞ்செய்வதையே பெரிதாக நினைக்குமட்டும் நம் தேசம் முன்னுக்கு வராது. சிலர் அவ்வாறு இருக்கவேண்டியதுதான். எல்லோரும் அதையே தேடிச்சென்றால் தேசத்துக்கு எவ்வாறு க்ஷேமமுண்டாகும். பணக்காரப் படிப்பாளிகளும் பதினைந்து ரூபா உத்தியோகம்போதுமென்று அயண்மனைச்சேவகத்துக்கு ஆசைப்படுகின்றார்கள். அவர்கள் தம் ஆஸ்தியில் ஒரு பகுதியை இவ்விஷயங்களில் திருப்பி உழைப்பார்களானால் பெருத்த நன்மையுண்டாவதிற்றடையில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தங்கள் சொற்ப அறிவைக்கொண்டு தனத்தை எத்துணையோபங்கு அதிகப்படுத்தக் காரணமென்ன? அவர்கள் முயற்சியும் மிதமான வாழ்வுமே. மரக்காயர்கள் வியாபாரத்தினாலேயே தங்கள் செல்வத்தைக் கோடிக்கணக்காய் விருத்திசெய்யவில்லையா? இவர்களெல்லாம் புத்திமான்களை வேலைக்குவைத்துக்கொண்டு தங்கள் காரியங்களைச் சாதித்துவருகிறார்களே. நாம் மட்டும் முயற்சி குன்றியிருப்பானேன். நாடார் ஜாதியார் வரவரத்தனிகர்களாவதை நாம் கண்கூடாகக் காணுகின்றோம். இவர்களெல்லாம் கஷ்டமில்லாமல் காலக்ஷேபம் பண்ணுவதற்கு ஆங்கிலப்படிப்பா துணை நிற்கின்றது.? சுயபாஷையை எழுதப்படிக்கவும் கணக்கு நன்றாகப்பார்க்கவும் தெரிகிறவரை படித்துவிட்டுப்பின் தொழிலில் ஏற்படுகிறார்கள். அதனால் அபிவிருத்தியடைகிறார்கள். நம் ஜனங்களில் அநேகர் இதனையுணராமல் ஆங்கிலப்படிப்பே மோக்ஷமென்று தங்கள் ஆஸ்திபாஸ்தியை அதிலேயே செலவிட்டுக் கெட்டுப்போகிறார்கள். பிரதம பாடசாலைப்படிப்பு நன்றாக முடிந்தபின்னர் மற்றைப்படிப்புடன் கைத்தொழிலும் அப்பியசிக்கவேண்டும். தொழிற்படிப்பும் சாமான்யப்படிப்பும் சேர்ந்தே இருத்தல்நலம். கல்வியறிவை முற்றிலும் அடைவது எல்லோர்க்கும் சாத்தியமன்று. சிலரே அதற்குத்தகுதியுள்ளவர்கள். தக்கவர்களை அதில் போகச்செய்து ஏனையவர்களைத்

தொழில் சம்பந்தமான படிப்பில் ஏற்படுத்தல் தேசக்ஷேமமாகும். இதுவிஷயமாய் ஜில்லாவுக்கு ஒரு பாடசாலையாவது இருத்தல் இன்றியமையாதது. இந்த ராஜதானிக்கே மூன்று நான்கிருந்தால் யாது பயன்? இவைகளிலும் உயர்ந்த தொழிற்பாட்சாலை ஒன்றென்றே கூறலாம். நம் நாட்டு ஒவ்வொரு ஜில்லா போர்டாரும் இது விஷ்யமாய்த்தக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களைச் சரிவரச் செய்யும்வண்ணம் நம்மெம்பர்கள் தூண்டுதல் செய்யவேண்டும். நம் பணத்தை நம்மெம்பர்களே இருந்துகொண்டு சரிவரச்செலவிட வழி வகை சொல்லாவிடில் ஜன க்ஷேமம் எப்படி விருத்தியாகும்? கவரன்மெண்டாரையும் இதுவிஷயங்களில் நம் பக்கமாய் இணக்கிக்கொண்டுவரவேண்டியது நம் கடமை. ஜனங்கள் சரிவர உழைத்தால் கவரன்மெண்டார் செவிகொடாமலிருந்துவிடுவார்களா? வேறுவிஷயங்களில் ஒருகால் இருந்தாலும் பொது ஜனக்ஷேம விஷயத்தில் இருப்பார்களா? ஜனசௌக்கியத்துக்கென்று ஏற்பட்ட கவரன்மெண்டார் அதைக்கவனியாமல் வேறு எதைக் கவனிப்பார்கள்? நாம் தக்கவண்ணம் விஷயங்களை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அவர்களிடமிருந்து நன்மை பெறுவதற்கு நாமும் நீள நினைந்து ஒத்து வேலைசெய்யவேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது உண்மையன்றோ? பொதுஜன க்ஷேமவிஷயத்திலும் அதற்கு இன்றியமையாக்கல்வி விஷயத்திலும் நம் உபேக்ஷையையும் தூக்கத்தையும் நீக்கி இனியாவது முக்கியமென்று நினைத்து உழைப்போமாக. முயற்சி மெய்வருந்தக் கூலிதருவதுண்மை.

பத்திராதிபர்.

உ

மனிதனும் அவன் உடல்களும்

நூல் வரலாறு.

அறிவு, உணர்வு, ஞானம், சைதன்னியம் என்னும் சொற்களால் குறிக்கப்படும் வஸ்துவாகிய ஞாதுருவுக்கும் அது தங்கி

நின்று விளையாடும் உபாதிகளுக்கும் அதாவது மனிதனுக்கும் அவன் தரித்துக்கொள்ளும் போர்வைகளாகிய உடல்களுக்கும் உள்ள பேதம் தெளிவாய்த் தோன்றாமல் பிரமவித்தையை அப்பியாசிக்க ஆரம்பிக்கும் மாணுக்கர்கள் முதலில் அதிகமலைவுகொண்டு மயங்கி நிற்கின்றார்கள் என்பது கண்டு எமக்குத் தெரிந்தமட்டில் மேற்கூறிய விஷயங்களைப்பற்றி மிகத்தெளிவாய் அவர்களுக்குச் சொல்வாம். எமக்கு ஆரம்பத்தில் மிகக்கருகலாயும் கோப்பியமாயும் இருந்தவை இப்பொழுது தெளிவாய்ப் பட்டப்பகற்போல் பிரகாசித்து விளங்கிக்கொண்டும், கூரிய உருவக்குறிப்பு ரேகை முதலியவை இன்றி மந்தாகார மொத்தையாயிருந்த பலவும் திட்டமாய்க் கூரிய உருவம் வாய்ந்து ஒளிரும் அழகிய கோலமாய் எமக்குத் துலங்கிக் கொண்டும், ஒருவர் சொலக்கேட்டும் நூல்களில் வாசித்தும் உளத்தில் குறித்து நோக்கிப் பரோக்ஷமாய்க்கொண்ட பலவும் நேரில் பிரத்தியக்ஷமாய்க்கண்ட அபரோக்ஷ ஞானப்பொருளாய் இலங்கிக் கொண்டும் இருக்கும்படியான நிலைக்குயாம் இப்பொழுது அனுபவத்தில் வந்திருக்கின்றேம். ஆகையால் அனுபவசித்தமாய் ஆராய்ந்து கண்ட உண்மைகளைக் காரணகாரிய தொடர்பை யனுசரித்த ஒழுங்கில் ஒழுங்குபடுத்திச்சொல்வது எமக்குச்சாத்தியம். இவ்வுண்மைகளைச்சீடர்கள் யாவரும் தங்கள் பார்க்குஞ்சக்தியைப் பூரணப்படுத்திக்கொண்ட பிறகு தாங்களே திரும்பித்திரும்பிப்பார்க்கும் பொழுதெல்லாம் நேரில் கண்ணாரக் காணக்கூடும். மேலும் பூதபௌதிகப் பொருள்களையும் அவைகளில் விளங்கும் ஸ்தூல சக்திகளையும் கவனித்துப் பார்த்துச் சோதித்து அவைகளிலேயே பழகிக் கொண்டிருக்கும் பூதபௌதிக கலைஞன் எவ்வளவு திடமாயும் திட்டமாயும் நிச்சயமாயும் பூதபௌதிகப் பொருள்களின் தோற்றங்களைப்பற்றிப்பேசுகின்றானே அவ்வளவு திடமாயும் திட்டமாயும் நிச்சயமாயும் இவ்வுண்மைகளைப்பற்றி யாமும் பேசக்கூடும். பூதபௌதிக கலைஞன் சோதனை செய்வதிலும் பார்ப்பதிலும் சில அங்கங்களைத் தவறிவிட்டுப் போகக்கூடும். அதுபோலவே பூதபௌதிகாதீத கலைஞனும் சோதனைசெய்யும் அப்பியாசங்களில் சில அங்கங்களைத் தவறிவிடக் கூடும். ஆனல் அப்பியாசஞ் செய்து செய்து அனுபவஞானம் விசாலமாய் ஓங்கி வளர வளரப்பழைய விஷயங்களின் மேல் நூதன

வெளிச்சங்கள் விழுகின்றன. ஆகையால் அவைகள் முன்னிலும் அதிக தெளிவாய்ப் பிரகாசிக்கின்றன. முன்தோன்றாதன பின் தோன்றுகின்றன? அவைகளின் சம்பந்தங்கள் முன்னிலும் தெளிவாய் விளங்குகின்றன. மேலும் அவைகளின் உருவங்களும் அடிக்கடி மாறித்தோன்றுகின்றன. ஏனெனில் ஞான வளர்ச்சியால் நூதனமாய் விழும் அதிக வெளிச்சமானது ஆதியில் பூரணமாய்த் தோன்றினது. உண்மையில் பூரணமேயன்ற; ஒரு பகுதிதான் என்று காண்பிக்கின்றது. இவ்விடத்தில் யாம் சொல்லும் விஷயங்களை ஈசுவரன் வாக்காக அங்கீகரிக்க வேண்டுமென்று யாம் ஆக்ஷிச்சுதந்தர உரிமை பாராட்டிக்கேட்டு நிற்கவில்லை. ஒருமாணவி மற்றமாணவர்களுடன் தன்னனுபவத்தைக்கலந்துகொள்வது போலும் உபதேச மொழிகளை எம்சக்திக்குறைவால் அரைகுறையாய்க் கிரகித்திருக்கின்றேம் என்பதில் சற்றும் ஐயமின்றாயினும் அவ்வுபதேச மொழிகளை மாணுக்கர்களுக்குள்ள அற்ப சக்திகள் அவர்களை எவ்வளவு தூரம் சோதனைத் துறையில் செலுத்துமோ அவ்வளவு தூரம் அனுபவமாய்ச் சோதனை செய்து கண்ட பலன்களுடன் சேர்த்துச் சொல்லும் முயற்சியாய் இந்நூலை வெளியிடுகின்றேம்.

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

மனிதனது எழுகூறு

உயர்தரமனசு.

பிரமஞான சங்கத்தார் பரிபாஷையில் உயர்தரமனசு என்பது நமது நூல்களில் அறிவு என்றும் விஞ்ஞானம் என்றும் சொல்லியிருக்கும் பொருளேயாம். மனுக்குலம் இப்பொழுது ஏறிவந்துநிற்கும் பக்குவநிலையில் நித்தியப்பொருளாகிய உயர்தரமனசு அல்லது அறிவு என்னும் ஞாதுரு ஸ்தூலப் பிரகிருதி தலமென்றும் பூலோகம் என்றும் வழங்கும் பிருதிவி தலத்தில் வெகு அபூர்வமாய்த்தான் வெளித்தோன்றி பிரகாசித்து விளையாடக்கூடுமென்பது இந்நூலைக்கவனமாய் வாசித்துவரும் எல்லோருக்கும் இதற்குள்

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மிகத்தெளிவாய்த் தெரியவந்திருக்கும். ஆகையால் அதன் ஸ்வரூபத்தையும் இலக்ஷணத்தையும் சக்தியையும் அறிதல் அருமையே. ஆயினும் அந்த மகா உன்னதமான உயர்தாமனசில் தங்கி நிற்கும் சக்திகளைப்பற்றிக் கனவுகண்டதைப்போலும் மின்னொளி வீசி மறைவதைப்போலும் நாம் மனத்தில் சொற்பம்பற்றிக் குறிப்பாய் அறிவது கூடுமானகாரியமாம். தளைபட்டு முற்ற இடுக்கமான கூட்டிலடைபட்டுத் தத்தளித்துத் தவித்துநிற்கும் பறவையைப்போல் கீழ்தாமனசாகிய அந்தக் கரணத்தில் நெருக்குண்டு கட்டப்பட்டு ஒடுங்கி அடங்கி மட்டுப்பட்டுக்கிடப்பினும் அச்சக்திகள் உண்மையில் இருப்பதைக்கொண்டு அச்சக்திகளின் பெருமைகளை நாம் விசேஷமாய் யூகத்தினால் அறியக்கூடும். அறிவின் சக்திகள் அனந்தமாயினும் எல்லாம் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் மூன்று வகுப்பின்கீழ் அடங்கும். நாம் முந்தியே பிருதிவிலோகத்தில் போக்குவரத்தாயிருக்கும் மனிதனுக்குச் சுயேச்சையுண்டென்றும் அச்சுயேச்சைக்குக் கருவி அந்தக்கரணமாகிய கீழ்தரமனசென்றும் குறிப்பாய்க் காட்டினோம். சுயேச்சைக்கு வாஸ்தவத்தில் இருப்பிடம் நமது மனசு அல்லது அறிவு. இந்த மனசு எங்கும் நிறைந்த பரிபூரண அறிவு என்றும் விசுவமனஸ் என்றும் சர்வவியாபகமனஸ் என்றும் சொல்லப்பட்ட மகத்தத்துவத்தின் அம்சமாம். நமக்குச் சுயாதீனம் உண்டு என்று வரும் விருத்தி இந்த நமது அறிவினின்றுந்தான் உதிக்கின்றது. நாம் நம்மையே அடக்கி ஆளலாம் என்னும் உணர்ச்சி அதாவது நமது கீழ்தாச் சுபாவமானது எவ்வளவு குழப்பமும் கலகமும் விளைத்துப் போராட்டங்கள் உண்டுபண்ணினாலும் நமது உயர்தாசுபாவமானது நமது கீழ்தாமிருகசுபாவத்தை அடக்கியாளும் வல்லமையுள்ளது தான் என்னும் அறிவு நமக்கிருப்பது நமக்குள்ள இந்த அறிவினின்றுதான் வருகின்றது. நமது பிரஞ்ஞை காமத்துடன் ஒன்றுபட்டுக் காமமாக இருப்பதைவிட்டு விலகி அறிவுடன் ஒன்றுபட்டு அறிவாய் விளங்க எப்பொழுது ஆரம்பிக்கின்றதோ அந்த க்ஷணத்திலேயே நமது கீழ்தாசுபாவமானது நாம் ஏறிநடாத்தும் வாகனமாய்விடுகின்றது. 'நான்" ஆக விளங்குகின்றதில்லை. நமது வெற்றி கைகூடிவிட்டது. புருஷார்த்தம் சித்தித்துவிட்டது. அப்பொழுது அந்தக்காணத்தின் குதிப்புக்களும் துடிப்புக்களும் பாய்ச்சல்களும் போராட்டங்களும் கோட்டங்களும் ஒட்டங்களும் தான் கர்த்தாவாய் ஆக்ஷிபெறச்செய்யும் மல்யுத்தங்களும் பல் சத்தங்களும் நம்மைச்சேர்ந்து நமக்குள்ளிருப்பனவாயில்லாமல் நமக்குப் புறம்பாய்விடுகின்றன. தலைகால்தெரியாமல் பாய்ந்து ஓடும்பரியைக் கடிவாளத்தினால் இழுத்துப்பிடித்து அடக்கி நமது சுவாதீனத்தில் நாம் எப்படி வைக்கிறோமோ அப்படி அந்தக்காணமென்னும் நமது மனத்தையும் நமது இச்சைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி நாம் அப்பொழுது அடக்கியாளுகின்றோம்.

சுயேச்சை, தன்னிச்சை, இச்சாசுதந்திரம், மனிதனுக்குண்டாஇல்லையா வென்பது தார்க்கிகர் தத்துவசாஸ்திரிகள் முதலியவர்களுக்குள் மேனாட்டிலும் கீழ்நாட்டிலும் ஒரு பெருத்த வியவகாரம். சுயேச்சை இல்லாவிடின் புண்ணியபாபங்களும் நன்மை தீமைகளும் சுவர்க்க நரகங்களும் இல்லையாம். இரக்ஷைசிக்ஷைகளும், விதிவிலக்கங்களும் வேதாகம புராணங்களும் இதிகாசசாஸ்திரங்களும் அவசியமின்றாம்.

சுயேச்சை யென்னும் விஷயத்தைப்பற்றி ஸ்ரீமத் அன்னிபெசண்ட் அம்மையவர்கள் **பாதை** யென்னும் பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதியிருக்கின்றார்கள். அதின் விஷயம் அடியில் வருமாறு.

வரையறைக்குள்ளமைந்து கட்டுப்படாத இச்சைதான் அதாவது அகண்ட பரிபூரண இச்சைதான் சுத்த சுயமானதும் சுயாதீனமுள்ளதுமாயிருக்கக்கூடும். அகண்டமென்பதும் சுயம்பு என்பதும் ஒன்று. கண்டப்பட்டனவெல்லாம் அப்படிக்கண்டமாயிருக்குந் தன்மையினாலேயே அவசியம் சுட்டுக்கும் விவகாரத்திற்கும் உள்ளாகவேண்டும் ஆகையால் ஒருவிதமாகப் பந்தப்பட்டதாகவேண்டும். அந்த இச்சை பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும்பொழுது தானே உருபிகரித்துத் தோற்றத்திற்குள் வருவதற்கான விதிகளின்படி ஒருவரையறைக் குட்பட்டுவிடுகின்றது. மானத ஜீவர்கள் அஃதாவது பகுத்தறிவுள்ள ஜீவர்கள் அந்த இச்சையின் விகாரங்கள். ஒவ்வொரு ஜீவனும் உருபிகரித்துவருஞ் சக்தியின் தன்மையினாலேயே பந்தப்படுகின்றான். ஆனால் புறம்பில் வரையறைக்குள்ளகப்பட்டுப் பந்தப்படினும் தான் சொந்தமாய் விவகார முயற்சிகள் செய்வதற்கேற்பட்ட வட்டத்திற்குள் அந்தச்சீவன் சுயாதீனமுள்ளவனே. கூண்டிலடைபட்டிருக்கும் பறவையானது தனக்குப்புறம்பில் அந்தக்கூண்டினால் எல்லை கட்டப்பட்டுப் பந்தப்பட்டிருப்பினும் தன் சொந்தத்தொழில் முயற்சிகளாகிய இரையெடுப்பதும் குதிப்பதும் பாடுவதும் ஓடுவதும் செய்யத் தான் அடைபட்டு இருக்கும் கூண்டாகிய வட்டத்திற்குள்தானே அதற்குச்சுயேச்சை இருப்பது போலும். கிட்டின இரையைப் புசிப்பதற்கும், புசியாமல் பட்டினி கிடப்பதற்கும், கூண்டிற்குள் உள்ள இடததில்தானே ஓடி ஆடிக்குதித்துச்சோம்பலையும் தேகம் மறுத்துப்போதலையும் மாற்றிக்கிடைத்ததற்குள் எவ்வளவு சந்தோஷமா யிருக்கக்கூடுமோ அவ்வளவு சந்தோஷமாயிருப்பதற்கும், அல்லது இப்படி நமக்கு வந்துவிட்டதேயென்று தூங்கிச்சோம்பித் துக்கப்பட்டுக்கொண்டேயிருப்பதற்கும், அந்தக்கூண்டுக்குள் வந்துசேரும் வேறு பிராணிகளுடன் ஒற்றுமையாயிருந்து தனக்குக் கிட்டியதை அவைகளுடன் பகிர்ந்துகொண்டு அவைகளுடன் உறவாடிஅவைகளுக்கு இதம்செய்வதற்கும் அல்லது அவைகளைப்பகைத்து அவைகளுக்கு எப்பொழுதும் இம்சைகொடு

த்துக்கொண்டேயிருப்பதற்கும் அதற்குச் சுயேச்சையுண்டு என்பது யாவரு மறிந்ததே. ஆகையால் ஒவ்வொரு ஜீவனும் தன்னுடையசொந்தப்பிரபஞ்சத்தில் பிரமாண்டத்திற்கு ஈசுவரனுடைய இச்சை எப்படியோ அப்படி யிருக்கின்றான். அஃதாவது இவன் இவனுடைய பிரபஞ்சத்திற்குள் பிரமாண்டத்தினுடைய விசுவேச்சையின் சாயையாகவிருக்கிறான். அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுண்டென்றபடி பிரமாண்டத்திற்கு ஈசுவரன் எப்படியோ அப்படியே பிண்டத்திற்குச் சீவனும். பிண்டமானது பிரமாண்டத்தின் சிறு ரூபம். பிண்டம் அண்டத்தின் அச்சே. இப்பொழுது இந்த இச்சையானது முறையாக ஒவ்வொரு தலத்திலும் படிப்படியாகத் தொழிற்செய்துவந்து மேலும் மேலும் ஸ்தூலமாய் விளைந்துவரும் தத்துவங்களில் சென்று கடைசியாகப் பிரகிருதி தத்துவமாய்க் கட்டியான பதார்த்தத்தில் பிரவேசித்து அந்தக்கட்டியான பிரகிருதிதத்துவ மயமாய்த் தானும் ஆகும்பொழுது அந்த இச்சையின் பிரகாசமும் அந்த இச்சை எந்தப் பதார்த்தத்திலிருந்து தொழில் செய்கின்றதோ அந்தப்பதார்த்தத்தால் பந்தப்படுகின்றது. ஆயினும் அஃது இருந்து தொழில்செய்யும் பதார்த்தத்தை மாத்திரம் உத்தேசித்து அந்த இச்சை சுயாதீனமுள்ளதே. ஒரு சாமானிய திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டில் இவ்விஷயம் சற்றுத்தெளிவாக விளங்கும். நீராவியில் ஒரு சக்தி யிருப்பது யாவருக்கும் தெரிந்ததே. இந்தச்சக்தி பலவித இயந்திரங்களை இயக்கி அனேக அற்புதமான தொழில்களைச் செய்விக்கின்றது. இந்தச்சக்தி இச்சையைப்போலும். நீராவியானது இச்சை நின்று தொழில் செய்யும் தத்துவம்போலும். இந்த நீராவியானது அடுத்த கீழ்த்தலம் அல்லது நிலையாகிய நீராய் ஸ்தூலிகரித்து விளையும்பொழுது அந்த நீராவியிலிருந்த சக்தியும் அப்படியே நீரிலிருக்கவும் அதன் விலாசம் அது தொழில் செய்வதற்காகப் புகுந்த நீராகிய பதார்த்தத்தினால் வரையறுக்கப்பட்டு மட்டுப்படுகின்றது. நீராவியில் சக்தி எவ்வளவு வெளியாகத் தோன்றுகின்றதோ அவ்வளவு அதே சக்தி நீரிலிருந்தும் நீரின்தன்மையினால் மட்டுப்பட்டுத் தோன்றுகிறதில்லை. அப்படியே நீரானது பனிக்கட்டியாய் உறைந்து இன்னும் அதிகமாய் ஸ்தூலிகரிக்கும்பொழுது சக்தியின் தோற்றமும் அதிகமாய் மட்டுப்படுகின்றது. நீராவி, நீர், பனிக்கட்டி இவைகளிலுள்ள சக்திக்கு ஒரு குறைவுமில்லை. இவைகளை நோக்கும்பொழுது அந்தச்சக்தி சுயாதீனமுள்ளதே. ஆனால் அந்தச்சக்தியின் தோற்றவிலாசம் அது நிற்கும் தத்துவத்தின் சுபாவத்தினால் பந்தப்பட்டுச்சுருங்கி நிற்கின்றது. இப்படி ஒவ்வொரு படியிலும் உள்ளிருக்கும் சுயாதீனம் அறிவில் தோன்றினும் ஆராய்ச்சியால் அச்சுயாதீனமானது அது தோற்றுவதற்கு ஏற்பட்ட தலத்தின் எல்லைக்கட்டுக்கும் தத்துவ சுபாவங்களின் பந்தனைக்கும் உட்பட்டுத்தான் தொழில்செய்து விளங்கும். அதாவது கீழ்த்

தா தலத்திலும் தத்துவத்திலும் தொழில்செய்ய அதற்குத்தடை சிறிதுமின்றி விடுபட்டிருப்பினும் அதன் பிரோணத்திற்குக் கீழ்த்தா தலமானது இணங்கி எதிரொலிக்குந் திறமின்றியிருத்தலால் அதன் பிரசன்னம் தடைபட்டு நிற்கின்றது. நீரும் பனிக்கட்டியும் நீராவியும் வஸ்துவில் ஒன்றாயிருந்தபோதிலும் அவைகளின் * தல பேதங்களினால் அவைகள்மேல் ஒரே விதமாக நாம் தாக்கும் தாக்குக்களுக்கு அவைகள் வித்தியாசமாய் எதிரொலிப்பதுபோலும். தாக்கும் சக்தியும் விசையும் பிரம்பு முதலியனபோன்ற தாக்கும் கருவியும் ஒன்றாயிருந்தபோதிலும் நீர் செய்யும் எதிரொலிபோல் பனிக்கட்டி செய்யாது.

(இன்னும் வரும்.)

தி. மீனாட்சிசுந்திரம் பிள்ளை.

ஜகத்ஜோதி.

[283-ம் பக்கத்தொடர்ச்சி]

எல்லாப்படியாலும் வியாகூலமடைந்த ஜகத்ஜோதி எந்நிலைமையிலிருந்தாள் என்று பார்ப்போம். அவளுக்கு வர வர அவ்வாழ்வில் வெறுப்புத் தோன்றிற்று. அடிமைத்தனத்தைப்போல துர்ப்பாக்கியமான நிலைமை இவ்வுலகில் வேறொன்றுமில்லை. தனக்கு இந்நிலைமை எப்பொழுதாவது நீங்கவுமிடமுண்டோ என்று அவள் கிலேசமுற்றாள். இவ்வாறு பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அத்தோட்டத்தில் ஒரு கிழவி குறிசொல்லுகிறாளென்றும் அது மிகவும் பலிக்கிறதென்றும் கேள்வியுற்றுத்தன் தாதிமூலமாய் அவளைக்கூட்டிவரச்செய்தனள். அவள்ஒரு நரைத்தமூதாட்டி. ஒட்டிய கன்னமும் நாணல் போல் நரைத்த தலையும் தளர்ந்த நடையும் சுருங்கிய தோலும் தடுமாடுகிற வார்த்தையும் தொங்கும் புருவமும் மங்கிய பார்வையுமுள்ளவள். வரும்பொழுதே நடுங்கிக்கொண்டு வந்தாள். உடனே ஜகத்ஜோதி எழுந்திருந்து ஆசனமளித்து மரியாதைசெய்து அம்மா! நீங்கள் குறி சொல்வதில் மகா சாமர்த்தியமுடையவர்கள் என்பதைக் கேள்வியுற்று உங்களைப்பார்க்க நினைத்துக்கூட்டிவரச் சொன்னேன். என் அதிர்ஷ்டவசம் எனக்கு நன்றாகத் தெரிகிறது.

---

* நீர் பிருதிவியில் அப்புத்தலத்தையும், பனிக்கட்டி பிருதிவியில் பிருதிவி தலத்தையும், நீராவி பிருதிவியில் தேயு தலத்தையும் சேர்ந்தவை.

இருந்தாலும் உங்களையும் ஒரு வார்த்தை கேட்டு வைக்கலாமென்று நினைத்தேன். என்மீது கருணை கூர்ந்து சரிவரக் குறிபார்த்துச் சொல்ல மனமிருந்தால் சொல்லுங்கள். பாவ ஜன்ம மெடுத்த எனக்கு உங்களிடம் குறிகேட்க அதிர்ஷ்டமில்லை யென்றால் இப்பேதையை ஆசிர்வாதமாவது செய்துபோங்கள். உங்கள் போன்ற பெரியோர்கள் ஆசிர்வாதம் மிகவும் க்ஷேமத்தை யுண்டாக்கும் என்று வினயமாய்க்கூறி அவளுக்கு உற்சாகம் உண்டாகும் வண்ணம் பக்கத்திலிருந்த தந்தப்பெட்டியைத்திறந்து ஒரு மோகரா எடுத்து அக்கிழவி கையில் வைத்தனள். கிழவிக்கு உடம்பு தெரியாமல் சந்தோஷமுண்டாயிற்று. அவள் உடனே சிரித்த முகத்துடன் நிமிர்ந்து ஜகத்ஜோதி முகத்தைக் கூர்ந்து பார்த்து "பாக்கியவதி! உன்னைப்போல் என் வல்லமையை யார் அறியப்போகிறார்கள். நீ ஏதோ பணம் கொடுத்ததற்காக நான் சந்தோஷப்படவில்லை. பணம் கிடக்கட்டும். யாரிடத்தில் தான் பணமில்லை. இந்தக் கண்ணால் எத்தனையோ கோடி பெயனைக் கண்டாயிற்று. பணக்காரரெல்லாம் பணக்காரராயிருக்கிறார்களா? ஏழைகளெல்லாம் எப்போதும் ஏழைகளாகயிருக்கிறார்களா? ஓடம் வண்டியில் ஏறுவதும் வண்டி ஓடத்தில் ஏறுவதும் சகஜம் தானே. நான் அந்த நாளில் ஆக்பர் தாயாருக்கும் குறி சொல்லி யிருக்கிறேன். இஃது அந்தம்மாள் இனாம் கொடுத்த மோதிரம். அவள் கருப்பிணியாயிருக்கையில் அவளுக்குக் கோடி சூரியப்பிரகாசமாக ஒரு புத்திரன் உண்டாவானென்றும் ஆனால் அதற்கு முன் அவள் படும் கஷ்டம் மிகுதியா யிருக்குமென்றும் அக்கஷ்ட காலங்களில் தெய்வ உபாசனை பண்ணிக்கொண்டு பொறுமையுடனிருக்கவேண்டுமென்றும் சொன்னேன். சொன்னவண்ணமே அவள் தன் பர்த்தாவுடன் ஊர்விட்டு ஊர்போய் அந்நிய நாட்டு அரசனிடத்தில் அடைக்கலம் புகுந்து அவன் சம்ரக்ஷணைக்குள் சில நாளிருந்த பின் சுவதேசம் வந்து க்ஷேமமடைந்தாள். பிரயாண காலத்தில் அவளுக்கு நேர்ந்த கஷ்டத்துக்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள். பூரண கர்ப்பிணியாயிருந்த அம்மாதரசியையும் தன் உண்மை மந்திரியையும் ஆறு விசுவாசமுள்ள வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு அவள் நாயகனை உமயூன் சத்துருவினின்றும் தப்பித்து ஓடப் பாலைவனங் கடந்து செல்லுகையில் அம்மாதர

சிக்குக்கொடிய தாகமுண்டாயிற்று. தண்ணீருக்காகத் தவிக்கும் சமயத்தில் வேலையாட்கள் நாலாபுறமும் ஓடிப்பார்க்கையில் ஒரு கிணறு காணப்பட்டது. அதில் மிகவும் ஆழத்தில் ஜலமிருந்தபடியாலும் அதற்குச் சரியான நீண்ட சயிறு இல்லாததாலும் ஒரு வேலைக்காரன் தன் தலைப்பாகையைக் கிழித்துக் கயிற்றுடன்கட்டி ஜலம் மொள்ளுகையில் எல்லோரும் தாகத்தால் மிக்க ஆவலுடன் ஜலபாத்திரத்தில் கண்ணுயிருந்தார்கள். கிணற்றுமட்டத்துக்குச் செப்புவரவே எல்லோரும் எனக்கு உனக்கு என்று தாவிச்செம்பைப்பிடிக்கப்போகையில் கயிறு அறுந்து பாத்திரம் கிணற்றுள்விழுந்துவிட்டது. கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போகவே எல்லோரும் விசனமடைந்து தாகத்தைப் பொறுத்துக்கொண்டு போனார்கள். அத்துணை கஷ்டத்துக்கு நடுவில் அக்பர் சக்கரவர்த்தி பிறந்து பின் உலகமெல்லாம் புகழும்படியான ஞானவானுகவும் ஐசுவரியனுகவும் குணவானுகவுமிருந்தான். ஆகையால் தற்கால கஷ்டத்தை ஒரு பொருட்டாக எண்ணல்கூடாது. உலகத்தில் பெரியோர்களெல்லாம் கஷ்டப்பட்டேபின் சுகமடைந்திருக்கிறார்கள். எவ்விதக்கஷ்டத்திலும் கடவுளடியை மறக்கக்கூடாது. கடவுளை நம்பினோர் கைவிடப்படாரென்பது திண்ணம். அம்மா! உன்முகம் மகாலட்சுமியின் முகம்போலிருக்கிறது. நீ மகா அதிர்ஷ்டசாலி. உன் கையை நீட்டு பார்ப்போம். எனக்குச் சொற்பரேகை சாஸ்திரம் தெரியும். இந்தச் சாஸ்திர விஷயத்தில் ஜகத்முழுவதும் மோசமாக இருக்கின்றது. எல்லோரும் ரேகைசாஸ்திரம் பார்த்தல் இயலாது. பலர் பாசாங்குபண்ணிவருகிறார்கள். என்போலியோருக்குப் பெரியவர்கள் உபதேசமுண்டு. சாஸ்திரப் பரியச்சியமும் அதிகமுண்டு. சாஸ்திரம் ஒன்றிருப்பதையும் அஃது உண்மையென்பதையும் எவரும் ஆக்ஷேபிக்கமுடியாது. அவ்வித்தையைக் குருகடாட்சத்தால் பெறவேண்டும். சத்தியம், ஞானம், ஒழுக்கம், ஜீவகாருண்யம் முதலிய குணங்கள் உள்ளவர்களுக்கே அதுபலிக்கும். அதனிடத்தில் பரம விசுவாசம் வைத்துப் பொய் பித்தலாட்டம் இன்றி அநுபவத்திற் கொண்டுவந்தால் பலிக்கும் என்பதிற்றடையில்லை. காலம் கெட்டுப்போயிற்று. எல்லோரும் குறிசொல்லத் தெரிந்ததாகப் பாசாங்குபண்ணுகிறார்கள். ஜனங்களை வஞ்சித்துப் பணம்

சம்பாதிக்கச் சில ஏடுகளை எழுதிவைத்துக்கொண்டு அந்தரிக்ஷி சாஸ்திரம் இந்தரிக்ஷி சாஸ்திரம் என்று புரட்டுவார்த்தைகள் பேசிக்கொண்டு ஒரு சாஸ்திரத்திலுமில்லாத புதுப்பெயர்களைச் சொல்லி ஏமாற்றிக்கொண்டு ஜனங்களுக்குப் பெருங்கேடு விளைவித்துக்கொண்டுவருகிறார்கள். அவர்கள் ஏடுகளைப் புதுப்பிக்கும் விதமும் அவைகளைப்பாடம் பண்ணி அவற்றில் நூதன பாடல்களை எழுதிப் பழையபாட்டாகச் செய்யும்விதமும் மிகவும் சுலபத்தில் எந்தப்புத்திமானும் அறிவான். பாமரஜனங்கள் இம்மோசக்காரருடைய சூதையறியாமல் விளக்கைச்சுற்றி வட்டமிட்டு அதில் விழும் விட்டில் போல் மதிமயங்கி ஏமாந்துபோய் கையிலுள்ள காசை இரணமிடுகிறார்கள். இஃது ஒரு பெருஞ் சூதாட்டமே. அப்படிப்பட்டவர்களில் ஒருவராக என்னை நினைக்கவொண்ணாது. நான் சொல்லுவது பலியாமற் போகாது. உள்ளதைத் தவிர்த்து வேறொன்றும் எனக்குச் சொல்லவும் தெரியாது. ஏதோ எனக்குத் தெரிந்ததை வஞ்சனையில்லாமல் சொல்லுகிறேன். கேளாய்! அம்மா! ஜகத்ஜோதி! நீ பிறந்தது பாலைவனம். நீ சாகப்போவது சிம்மாசனம். நீ குழந்தையாயிருக்கையில் ஒரு பாம்பு உன்னை மண்டலமிட்டுத் தழுவிற்று. இனி நீ ஒரு சக்கிரவர்த்தியின் கரங்களால் தழுவப்படுவாய். நீ சங்கடத்திற் பிறந்தாய். ஆனால் சம்பத்திற் சாவாய். நீ பிறந்த காலத்தில் மங்கிக்கிடந்த நக்ஷத்திரம் பெரும் பிரகாசத்தையுடைய சூரியனை மாறும். இவை பசப்பு மொழியல்ல. சத்தியவாக்கே. நம்பு அம்மா! நான் சொல்லுவதை நம்பு. கிழவி பேச்சுப் பின் விளங்கும். அலட்சியம் செய்யாதே" என்று கூறவே ஜகத்ஜோதியும் புன் சிரிப்புக் கொண்டு மற்றொரு மோகராவை எடுத்து "தற்காலம் இதை வைத்துக்கொள்ளுங்கள். தங்களை நான் என்றும் மறவேன்" என்று சொல்லி அவள் கையில் வைத்து விடைகொடுத்தனுப்பினாள். அக்கிழவியும் பரமசந்தோஷம் அடைந்து வீட்டுக்குத் திரும்பிச் சென்றான். கிழவிபோன பிற்பாடுஜகத்ஜோதி அவன் சொன்ன மொழிகளைச் சிந்தித்துப் பார்த்து "அவை பலிக்கும்" என்றே தோற்றுகிறது. நாம் பிறந்த வைபவம் பெற்றோரன்றி மற்றெவர்க்கும் தெரியாதே. தந்தை அக்கால துக்க சம்பவத்தை அடிக்கடி சொல்லிக்கேட்ட எனக்குத் தெரியும். இக்கிழவிக்

குத் தெரிந்ததைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. இவை போலவே மற்ற ஒவ்வொரு விஷயமும் உண்மையானாலும் ஆகும். யாருக்குத்தெரியும் பகவானுடைய இருதயம். இருட்டிக்குப் பின் வெளிச்சம் என்று சொல்வது பொய்யா? எனக்கும் ஒருகால் நல்வேளை வந்தாலும் வரலாம். ஏன் வரக்கூடாது. யார் அதிர்ஷ்டத்தை யார் கண்டார்கள். பாலைவனக்கொடுமையினின்றும் தப்பிப்பிழைத்து இத்துணை வைபங்களை அனுபவிக்கவேண்டுமென்றுதலையில் எழுதின தெய்வம் இன்னும் சுகிர்தத்தை ஏன் எழுதியிருக்கமாட்டாது. எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டமோ அவ்வளவுக்கவ்வளவு சுகமுண்டு என்பது உண்மையே. மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழையன்றோ. நாம் ஏன் வீணாக மனம் புழுங்கவேண்டும். விதியின்படி நடந்தேதீரும். எக்காலத்திலும் பகவான் பாதமே கதியென்றிருந்தால் அவர்விட்டவழி விடுகிறார் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கையில் பலநாளுக்குமுன் பிரிந்த பாவையைப் பார்க்கப் போன சலீம் சக்கரவர்த்தி நம் ஜகத்ஜோதியிருந்த அற்புத அறையில் நுழைந்தான். அவ்வறையில் ஜகத்ஜோதி அச்சமயம் ஒரு சோபாவில் சாய்ந்துகொண்டிருந்தாள். மெல்லிய நூலாலிழைக்கப் பட்ட டாகா மஸ்லின் உடையோடுகூடி எவர் வரவையும் எதிர்பாராமல் யதேச்சையாய்ப் படுத்திருந்ததால் சரேலென நுழைந்த சக்கரவர்த்தியின் கண்களுக்கு அவள் உருவம் அற்புதமாகத் தோற்றிற்று. "அணங்குகொல் ஆய்மயில்கொல்லோகனங்குழை,மாதர்கொன்மாலுமென்நெஞ்சு" என்று பிரமித்தான். அவள் சரேலென எழுந்து நாணித் தலைகுனிந்து பூமியை நோக்கியவண்ணமாய் நின்றனள். சக்கரவர்த்திக்கு அடக்கொணு மகிழ்ச்சியுண்டாயிற்று. ஆதியில் தான் கண்ணுற்ற கன்னிவடிவத்துக்கும் தற்காலம் கண்ணுற்ற மங்கை உருவத்துக்கும் அஜகஜாந்திரமான வித்தியாசமிருந்ததைக்கண்டு வியப்புற்றான். கண்டார் உயிருண்ணும் தோற்றத்தையுடைய அவளிடம் அதுகாறும் அலட்சியமாயிருந்ததைக்குறித்துத்துக்கித்தான். ஜகத்ஜோதியோ வலையில் அகப்பட்ட மான்போல்மருண்ட விழியுடனே திகைத்துநின்றான். சக்கரவர்த்தி அவள் மனத்தைக்கவரத்தக்க மொழிகளைக்கூறி அவளை உற்சாகப்படுத்தத் தொடங்கினன்.

(இன்னும் வரும்).

எஸ். சாமிநாதையர்.

ஹிந்து மதத்தைப் போற்றுமின்.

அந்நிபெஸன்டு அம்மையாரின் ஓர் விஞ்ஞாபனம்.

ஹிந்து சமயிகளே!

இந்துமதத்தைக் காப்பாற்றும் கடமை முக்கிய மென்பதைப் பற்றி நான் வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். ஏனெனில் இந்தியாவின் வருங்கால நிலைமை உங்கள் கைக்குள் இருக்கிறது. இந்தியா தன்மதத்தை "இழப்பதினுங்கேடு ஒன்று மில்லை." தற்கால நாகரிகம் உங்களிடமில்லையென நீங்கள் கவலை கொள்ளன்மின். அந்நாகரிகம் மட்டுக்கு மிஞ்சியே உங்களிடம் இனி அமையப்பெறுவதாகும். அதன் உற்ற காலம் வந்தே தீரும். அஃது ஒவ்வொரு ஜாதியாரின் தள்ளாத்தலை விதிப்படி நடந்தே தீரும். தற்கால மனிதர்களுடைய நோக்கமும், அவர்கள் மனோபாவமும், ஜடப்பொருளின் பகட்டால் அவர்களுக் குண்டாயிருக்கும் மதிமயக்கமும் மாயாவியான மேற்றிசை ஜாதியாரின் மதிநுட்டபான வல்லமையும், ஆக இவைகளெல்லாமுடைய 20-ம் நூற்றாண்டின் வெளிப்பகட்டான நாகரிகம், இந்தியாவுக்கு வந்துவிடும் என்பது திண்ணம். ஆனால் இந்நாகரிகம் அதிகப்பட அதிகப்பட, ஒருபெரிய அபாயமோ தலைமேல் நிற்கிறது. அஃது உண்மை. அது நெருங்கின அபாயம். அஃது என்னவென்றால், இந்தியா தன்சநாதன தர்மத்தை இழப்பதேயாம். ஆட்டுக்கடாச் சண்டையில் நரி செத்தாற் போல், பழைய நாகரீகத்திற்கும் புதிய நாகரிகத்திற்கும் உண்டாகும் போரில் சநாதன தர்மம் பொய்த்துப்போகலாகும். ஹிந்துக்கள் ஹிந்து மதத்தைக் காப்பாற்றாவிடின், எவர்தாம் அதைக் காப்பாற்றுவார்; இந்தியாவின் சொந்த மக்களே தங்கள் சமயத்தில் சிரத்தை யில்லாமல் இருந்தால், பின் யாவர் அதைப் பாதுகாப்பார்கள்? ஹிந்துக்களே இந்தியாவைப்போற்ற முடியும். இந்தியாவும் ஹிந்து மதமும் ஒன்றே. நீங்கள் செய்து முடிக்கக்கூடியதை மேனாட்டுச் சரீரம் பெற்றுள்ள யாவராலும் செய்ய ஒண்ணாது. நான் ஹிந்து அல்லாத ஏனைய சரீரத்தோடு இந்தியாவினிடத்தில் எவ்வளவு அன்பு பாராட்டினும்,

எவ்வளவு மனப்பூர்வமான கைங்கரியம் செய்திடினும், எவ்வளவு பரிபூர்ண பக்தி பாராட்டினும், இந்தியாவின் புத்திரர்களாகிய நீங்கள் செய்யக்கூடியதுபோல், நான் செய்ய முடியாது. ஹிந்துவாய்ப் பிறந்தாலன்றி ஹிந்துவாக முடியாது. ஒருவன் ஹிந்து மதத்துக்கு எவ்வளவுதான் உழைக்கட்டும், ஹிந்துவின் ஆசார சீலங்களை எவ்வளவுதான் பின்பற்றிப் பழகட்டும், ஹிந்துமத சித்தாந்தங்களில் எவ்வளவுதான் நல் நம்பிக்கை வைக்கட்டும், ஹிந்துவாகப் பெறாத ஒருவனை ஹிந்துவாக ஆக்கமுடியவே முடியாது. ஆதலின் என் போலியர் ஹிந்துமத இருதயத்தோடு கூடியிருந்தாலும், முன் ஜன்மங்களில் ஹிந்துவாகவே இருந்திடினும், நாங்கள் உங்களுக்குப் புறம்பாகவிருந்து, உதவிமட்டும் புரியக்கூடுமே அல்லாது, வேறு ஒன்றும் செய்ய இயலாது. எங்கள்உதவி வழிகாட்டுமே அல்லாது ஊட்ட முடியாது. நீங்களே நேரில் வேலைகளை முடிக்கவேண்டியவர்கள். சிறிதும் தவறன்மின். ஹிந்து மதமன்றி இந்தியாவுக்கு இனிக் கதி மோக்ஷமில்லை. ஹிந்து மதமென்ற வேர்கள் இந்தியா என்ற பூமியின்கண் ஊன்றிப்போயிருக்கின்றன. அதைவிட்டு அவ் வேர்களைக் களைந்தெறிந்தால் இடம் விட்டுப் பெயர்த்த விருக்ஷம் போல் வாடி வதங்கிப்போவது திண்ணம். இந்தியாவில் தற்காலம் செழித்து வாழ்கின்ற மதங்கள் பல. ஜாதிகள் பல. ஆனால் அவைகளில் எதுவும் வெகுகாலத்திற்கு முன்னிருந்ததன்று. ஒருமைப் பற்றிக் கூடிவாழ்தற்கு அவைகள் அவசியமுமில்லை. ஒவ்வொன்றும் வந்த விதமே போகுதலும் கூடும். இந்தியா மட்டும் இருக்கவே செய்யும். ஹிந்து மதம் போனாலோ இந்தியாவின் கதி யென்ன? வெறும் வார்த்தையாகத் தங்கி யிருக்கும்.—வாசனைபோன செப்பாக மாத்திர மிருக்கும். ஆனால் அதன் சரித்திரம், அதன் கிரந்தங்கள், அதன் கலைஞானங்கள், அதன் ஞாபகக் குறிப்புக்கள், இவை எல்லாவற்றிலும் குறுக்கே ஹிந்து மதத்தின் பாவங்கள் ஊடுருவிப் பாய்ந்து பின்னி யிருக்கின்றன.

ஸோரூஸ்டரின் மதம் (பார்ஸியர்களின் சமயம்) இங்கு ஒதுக்கிடம் தேடிப் புகுந்து அன்பான ஆதரவடைந்து இதனை அடைக்கல ஸ்தானமாக்கிக் கொண்டது. அம்மதம் போய்விடக் கூடுமானாலும் இந்தியா நின்ற நிலையிலேயே நிற்கும். புத்த மதம்

இங்கு முதலில் உண்டானது. அஃது இந்தியாவை விட்டுப்போய்விடினும் இந்தியா போகாமல் நிலை நிற்கும். மகமதிய சமயம் ஜயதாங்கத்தை முழக்கிக்கொண்டு வந்தது. மகமதியர், இந்திய ஜனங்களோடு ஜனங்களாய்ப் பங்காளிகளாகி விட்டார்கள். இனி நடக்கும் நடவடிக்கைகளிலும் அவ்வாறே ஆவார்கள். இருந்தாலும் இஸ்லாம் மதம் இந்தியாவை விட்டு ஒருகால் போய்விட்டாலும் விடலாம். இந்தியாமட்டும் போகாமல் நிலை நிற்பதாகும். கிறிஸ்தவர்கள் தேசத்தை ஆளுகிறார்கள். கிறிஸ்துவமதம் அபிவிருத்தியாகிக் கொண்டு வருகிறது. இருந்தாலும் கிறிஸ்துமதம் குன்றிப் பின்னர் மறைவதாகும். அப்பொழுதும் இந்தியாமட்டும் நிலைநிற்கும் என்பதற்கு ஐயமில்லை, அவர்கள் வருகைக்கு முன்னும் இந்தியா இருந்தது. அவர்கள் போனபிறகும் இந்தியா இருக்கும். இந்தியாவின் தொட்டில் தொடங்கி வரும் ஹிந்து மதம் ஒழிந்தாலோ இந்தியா இடுகாட்டையடைய வேண்டியது தான். அப்பொழுது இந்தியாவும் அதன் மதமும் எகிப்தும் அதன் மதமும் போல் பூர்வ ஞாபகச் சின்னமாக மட்டும் நிற்பதாகும். பழங்கதையாக முடியும். அந்நிலையில், இந்தியா பழைய சாஸன ஆராய்ச்சிக்காரர்களுக்குமட்டும் விஷயமாகும். இறந்த பின்னர், அறுத்துப்பார்த்துப்பரிசோதனை பண்ணத்தக்க பிரேதம்போல நிற்பதாகும். ஒருகாலும் தேசாபிமானத்துக் குரியதாகாது. உலகத்துள் ஒரு ஜாதியாருக்கு அந்தஸ்துக்குரியதாயு மிராது. ஹிந்து மதத்தை நீங்கள் கைநழுவ விட்டால் உங்கள் தாயை இருதய கமலத்தில் குத்தினவர் ஆவீர்கள். அத்தாயின் ஜீவரத்தமான ஹிந்து மதம் கொப்பளிக்க அவள் ஜீவனும்

> "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
> உடம்போ டுயிரிடை நட்பு."

என்ற வண்ணம் வெளியேறிப்போம். காயப்பட்டு, தொந்தரவுபட்டு, ஜயிக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, அம்மாது கிரீடமிழந்த அரசியைப் போல் இப்போது இருக்கிறாள். அப்படியிருந்தும், அவள் மதம் அவளை ஜீவிக்கச் செய்கிறது. இல்லாவிடில் அவள் செத்தவர்களோடு கணக்கிடப் பட்டிருப்பாள். வருங்கால வாழ்வை நீங்கள் மதிக்கும் பொழுதும், உங்கள் தாய்ப் பூமியை நீங்கள் நேசிக்கும் பொழுதும்

உங்கள் பூர்வமதத்தின் பற்றை விடன்மின். இந்தியாவின் ஜீவ ஆஸ்பதமான சம்பந்தத்தினின்றும் ஒருகாலும் ஏமாந்து நீங்கன்மின். ஹிந்துவாய்ப்பிறந்த பாத்திரங்களில் தவிர வேறு எம்மதப் பாத்திரத்திலும் ஆத்மார்த்தமான விஷயங்கள் வார்க்க முடியாது. இதனிலும் உயர்ந்தவும் விலைமதிப்புள்ளவுமான வேறு பாத்திரங்களும் கிடையா.

ஆகையால் உங்கள் உயிருக்கு உயிராக இருக்கிற ஹிந்து மதத்தை விசுவாசத்துடன் போற்றுமின். வேறு எவ்வித அசுத்தகாமும் இவ்வுயர்வு பற்றிய சமயத்தைத் தீண்டாமலிருக்கும் வண்ணம் போற்றுமின்.

"உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந்தே எத்துக்குறு துணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்துவாழ்வீ ரீங்கென."

ஓம்தத்ஸத்.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி.]

பின்பு குணதத்துவத்தினின்றும், புத்தி தத்துவந்தோன்றி, அவ்வுயிர்கள் செய்த புண்ணிய பாவங்கள் தன்பாற்சாரப்பட்டும், இருவினைக்கீடாக வந்த விடயத்தை இஃது இன்னதென நிச்சயித்தும், நிச்சயித்த பின்னர்ச் சுகதுக்க மோகவடிவாய்ப் பரிணமித்தும், பரிணமித்தவழி, உயிரின் அறிவுதொழில்கட்கு விடயமாகியும், முதல்வன் ஆணையால் நிகழும். இப்படிப்பட்ட புத்திதத்துவத்தின் குணங்கள் எட்டு வகைப்படும்; அவையாவன. தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம், என்பனவாம். அவற்றுள் தருமம், ஞானம் வைராக்கியம், ஐசுவரியம், இந்நான்கும் சாத்துவிகம். அவைராக்கியம் ஒன்றும் ராஜசம், அதர்மம், அஞ்ஞானம், அனைசுவரியம், இம்மூன்றும் தாமசம். அவற்றுள் தர்மம், இயமம், நியமம், என இரண்டு பேதப்பட்டு விரிவாய்ப் பலதிறப்படும். அவற்றின் இலக்கணம் முன்னமே கூறப்பட்டுள்ளன. ஞானம் பத்து வகைப்படும் அவற்றின் இலக்கணமும் முன்னமே கூறப்பட்டுள்ளன. மூன்றாவதான வைராக்கியம் பத்துவகைப்படும். அவையாவன. வியாதி பீடைகளால் வரும் ஜநநவைராக்கியம். தன்னுடைய தேக

தோடத்தைக்கண்டுவருந்துந் தேகவைராக்கியம், சகல சம்பத்துக்களையுங் குறைவற அநுபவித்து இனிப்போதும் என்று வரும் ஐசுவரிய வைராக்கியம், ஆதியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகங்களினாலே வரும் பிரபஞ்ச வைராக்கியம், பொருளைத்தேடுதலினாலும் காத்தலினாலும் கள்ளர்கொண்டுபோதலினாலும் உண்டாகும் துக்கம்பற்றிவரும் திரவிய வைராக்கியம், தாய் தந்தை மனைவி மைந்தர் சுற்றத்தார் நண்பர் முதலாயினரைப் பிரிந்த துக்கத்தினாலே கூட்டமெல்லாம் பிரிந்தகாலத்திலே துக்கத்துக்கு ஏதுவென்று வருஞ்சங்கத்து வைராக்கியம், காமுகனாயிருக்கின்றவன் தான் மோகிக்கப்பெற்ற ஸ்திரீயினிடத்திலே குணத்தாலாயினும் தேகத்தாலாயினும் வைராக்கியத்துக்கு ஏதுவாகிய ஒரு தோடத்தைக் கண்டபோது வரும் ஸ்திரீ வைராக்கியம், அன்னபானாதிகள் ஒருபொழுது இல்லாதிருக்கினும் தேகநில்லாது, எத்தனை நாள் எத்தனை வகையாய்ப்புசித்தாலும் திருத்தியடையாது என்று வரும் போசன வைராக்கியம், தானத்துக்குப்போய்த் தள்ளுண்டதினால் வரும் பிரதிக்கிரக வைராக்கியம் இகத்திலே இப்படிப்பட்டதொரு ஏதுவுமின்றிப் பூருவஜன்ம சிவபூஜா புண்ணிய பலத்தினாலே தேகாதியாகிய சர்வவஸ்துக்களிலும் வரும் வைராக்கியம் என்பனவாம். இவற்றுள் இறுதியிற்கூறிய வைராக்கியம் உத்தமம். நின்ற ஒன்பதும் மத்திமம்.

நான்காவதான ஐசுவரியம், அணிமாதி பேதத்தால் எட்டு விதப்படும். அவையாவன:—அணிமா, மகிமா. லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், என்பனவாம். அவைகளுள் (க) அணிமாவாவது, மிகச்சிறிய உயிர்தோறும் தான்பரமாணுவாய்ச் சென்றிருக்குஞ் சிறுமையாம். (உ) மகிமாவாவது, பிருதிவிமுதற் சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நிறைந்திருக்கும் பெருமையாம்; (ங) லகிமாவாவது, மேருமலையைப் போலப் பாரமாயிருக்கும் யோகியை எடுத்தால் இலகுவாயிருப்பதாம்; (ச) கரிமாவாவது, அணுவைப்போல்இலகுவாயிருக்கும் யோகியை எடுத்தால் மேருமலையைப்போலப்பாரமாயிருப்பதாம்; [ரு) பிராப்தியாவது, பாதாளத்தினின்றும் பிரமலோகத்தில் புகுதலும் மீண்டும் பாதாளத்தை யடைதலுமாம்; (சு) பிராகாமியமாவது பரகாயத்திற் பிரவேசித்தலும், ஆகாயத்தில் இயங்குதலும், தான் இச்சித்த போகமனைத்தையும் தானிருக்குமிடத்தில் வருவித்தலுமாம். ஆகாயத்துள்ள சூரியனது உடம்பின் வெயிலினால் எல்லாம் விளங்குதல்போல மண்ணுலகத்துப் பொருள்களையும் விண்ணுலகத்துப் பொருள்களையும் முக்காலங்களையும் தன் சரீரத்தொளியால் அறிதலும் பிரகாமியம் என்று வேதங்கூறும்.(எ)ஈசத்துவமாவது முத்தொழில்களையும் தன்னிச்சைப்படி செய்து சூரியன் முதலிய கிரகங்கள் தன்னேவல் கேட்ப வாழ்தலாம்;(அ) வசித்துவமாவது இந்திராதி பேர்களையும் அசுரர்களையும் மனிதர்களையும் பூதங்களையும்

மிருகங்களையும் பறவைகளையும் தன் வசமாக்கிக்கொள்ளுதலாம். அநுபவிக்கும்போது கன்மாதிகளால் உபாதை யில்லாமலிருக்கையும் வசித்துவம் என்று வேதம் கூறும். இஃது எட்டுக்குணமான பார்த்திவ ஐசுவரியம். இது பிசாசர்களுக்காகும். இந்தப்பார்த்திப ஐசுவரியமும் ஜலத்தின் ஆப்பிய ஐசுவரியமும் கூடிப்பதினாறு குணம் இராக்கதர்களுக்கு ஆகும்; இவற்றுடன் தைஜஸமுஞ்சேர்ந்து இருபத்துநாலு குணம் இயக்கர்களுக்காகும்; இவற்றுள் வாயுவீயமுஞ் சேர்ந்து முப்பத்திரண்டுகுணம் கந்திருவர்களுக்காகும்; இவற்றுடன் ஆகாயமுஞ்சேர்ந்து நாற்பது குணம் இந்திரனுக்காகும்; இவற்றுடன் மானதமுஞ்சேர்ந்து ஐம்பதுகுணம் பிரசாபதிக்கும்; இவற்றுடன் பௌத்தமும் சேர்ந்து அறுபத்துநாலு குணம் பிரம்மாவுக்கு ஆகும். இதன் விரிவை ஆகமங்களுட்காண்க.

இனி அதர்மமாவது ஹிம்சை, களவு செய்தல், பொய் சொல்லுதல், சேராத மாதரைச்சேருதல், ஒருவன் செய்த அபகாரத்திற்கு பதில் அபகாரஞ் செய்தல், மாச்சரியம், நித்தியகன்மத்தில் லோபம், சௌசமின்மை, சந்தோஷமின்மை, கபடமாயிருக்கையெனப் பத்துவிதப்படும்.

அஞ்ஞானமாவது தமஸ், மோகம், மகாமோகம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் என்னும் பேதத்தால் ஐந்து விதப்படும். அவற்றுள் தமஸ் என்பது அனாத்மாவை ஆத்மாவாகப் பாவித்தல். அது சார்வாக மதமுதலான மதபேதத்தால் பத்துவிதமாகும். மோகமென்பது அணிமாதி எட்டைசுவரியம் சித்திக்கில் அதுவே பரமென்றிருக்கை. மகாமோகமென்பது திவ்வியங்களென்றும் அதிவ்வியங்களென்றும் பத்துவிதமாகப்பேதப்பட்டிருக்கும். சப்தாதிகளை ப்பரமென்று நிச்சயித்தலாகும். தாமிஸ்ரமென்பது சப்தாதி விடயங்கள் அணிமாதிகள் ஆகிய இவைகள் அழியில் வருந்தாபமாம். அந்ததாமிஸ்ரமென்பது சப்தாதிவிஷயங்களை அணிமாதி ஐசுவரியங்களைப்பிறர் புசிக்கையில் அதைச்சகிக்காமையாம். அவைராக்கியம் நூறு பேதப்படும். அனைசுவரியம் எட்டுவிதப்பட்டு விரியால் நூற்றெழுபத்தாறாகும். அவற்றை விரிக்கிற் பெருகும் ஆகமங்களுட்காண்க. ஆகவே தர்மம் பத்துவிதம், ஞானம் எண்பதுவிதம், வைராக்கியம் நூறுவிதம், ஐசுவரியம் அறுபத்துநாலுவிதம், அதர்மம் பத்துவிதம், அஞ்ஞானம் அறுபத்துநான்குவிதம், அவைராக்கியம் நூறுவிதம், அனைசுவரியம் நூற்றெண்பத்துநான்குவிதம் ஆகக்கூடிப் புத்தி தத்துவத்தின் விர்த்திகள் அறுநூற்றுப்பன்னிரண்டு. இந்த எட்டுத்தர்மமுள்ள புத்தியாகிற மகாசக்கிரத்தில் ஆன்மாக்கள் இடையறாது சுழன்று திரிகின்றார்கள் ஆதலால் அவற்றின் முடிவு ஒருவருக்குந் தெரியாதென்க: அப்படிப்பட்ட புத்திதத்துவத்தினின்றும் அகங்கார தத்துவந்தோன்றி, இவ்விடத்து என்னோடு ஒப்பவர் ஒருவரும் இல்லையென

அகந்தைப்படுதற்குக் காரணமாய், வாயிற்காட்சிக்கு விடயமாய்த் தோன்றியதொன்றனை இஃது இன்னதென்றும் புத்திதத்துவம் நிச்சயிக்கும்படியாக யானென்றும் எனதென்றும் அதன்கண் ஒருப்பட்டெழுந்து முதல்வன் ஆணையால் ஆன்மாவோடு வேற்றுமையின்றி நிற்கும். அவ்வகங்கார தத்துவம், குணவேற்றுமையால், பூதாதியகங்காரமும், வைகாரியகங்காரமும், தைசதவகங்காரமும் என மூத்திறப்படும் என்க. அம்மூன்றினுள்ளே தைசதவகங்காரத்தினின்றும் மனமானது தோன்றி எதிர்ப்பட்டதொரு விடயத்தை இ[illegible] யாதாகற்பாற்றெனச் சித்தரூபமாய் நின்று சிந்தித்தும் பின்னர் அதன்கண் ஐயுற்று நிச்சயித்தற்கண்ணதாகிய வேட்கையை விளைத்தும் முதல்வன் ஆணையால் நிற்கும் அம்மனம் சலமெனவும் அசலமெனவும் இரண்டு வகைப்படும்; சலமானது உள்ளே நின்று சங்கற்ப விகற்பங்களைப் பண்ணும்; அசலமானது புறம்பே யிந்திரியத்துவாரங்களினாலே புறப்பட்டு நின்று அருத்தத்தோடே யிந்திரியங்களைச் சம்பந்தம் பண்ணி நிற்கும். கண்முதலானவற்றால் நோக்கப்பட்ட விஷயத்தில் இவன் பிராமணன் என்பது முதலான நிச்சயம் சங்கற்பமென்னப்படும். நன்றாக விசேடண விசேடிய ரூபத்தாற் பொருளை நிச்சயிப்பதால் சங்கற்பமென்பர். அப்படிப்பட்ட விடயத்தில் இவன் பிராமணனோ அல்லது க்ஷத்திரியனோ என்பது முதலான சங்கற்பம், விகற்பம் என்று சொல்லப்படும். பலவிதமாகக் கற்பித்தலால் விகற்பமென்பர். சித்தம் இதில் அடங்கிவிடும்என்க. இந்தப் புத்தி, யகங்காரம், மனம், சித்தமென நான்கும் வெளி விடயங்களை நோக்காமையால் அந்தக்கரண மெனப்படும்.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

ஓஷதிசாஸ்திரம்

(முன்தொடர்ச்சி.)

வேர்கள்.

ஒவ்வொரு செடியிலும் இரண்டு விதமான தொழில்கள் உண்டு. (1) தன்னைக்காப்பாற்றிக் கொள்வதற்காகப் பூமியின்கண்ணும் வாயுவின் கண்ணும் உள்ள திரவியங்களை உண்டு தன்மயமாக்கிக் கொள்ளுதல் (2) தன்னுடைய வர்க்கத்தை அபிவிருத்தி செய்வதற்காக வித்துக்களை உண்டு பண்ணிக்கொள்ளுதல். இவ்விரண்டு தொழில்

கள் நடைபெறுமாறு பற்பல சாதனங்களும் கருவிகளும் செடிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. புஷ்பங்கள் முதலியன முக்கியமாய் வித்துக்கள் உண்டு பண்ணுவதற்காகவே ஏற்பட்டுள்ளன. அவை களைப்பற்றி விஸ்தாரமாய் முன் பிரஸ்தாபித்திருக்கிறோம். இனி முதற்றொழிலாகிய தன் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ளும் வழியாகிய உணவு தேடலைச் செடிகள் எவ்வண்ணம் நடப்பித்துக் கொள்ளுகி ன்றன என்பதைப்பற்றிக் கூறுவோம்.

ஒரு விதையைப் பூமியில் இடுவோமானல் ஈரம், உஷ்ணம் இர ண்டும் அதைத்தாக்க மேல் நோக்கி ஒருபாகம் முளையாகவும் கீழ் நோக்கி ஒருபாகம் வேராகவும் உண்டாகிறது. வித்தின்முளையுண்டா கும் பாகத்தை மேல்நோக்கி நடாமல் தலைகீழாகமாறிநட்டோமானல் சொற்பதூரம் மேல்நோக்காகச்சென்று பின்னர் வளைந்து மாறி மேல் நோக்காக வெளிக்கிளம்புகிறது. இதன் உண்மையைச் சற்று விசா ரிப்போம்.

செடிகள் பகுத்தறிவுள்ளனவா அல்லனவாவென்று யோசித் துப் பார்த்தால் உள்ளன என்பதற்கு இஃது ஒருதிருஷ்டாந்தமாகும். வித்தைத் தலைகீழாக நட்டும் வித்தின் முளையானது தலைகீழாகவே போகாமல் வளர்ச்சியில் தடை நேரிடுகிறதென்றும், அஃது இயற் கை வழிக்கு மாறுபாடாய்ச் சென்றதினல் நேரிட்டதென்றும் அத ஞல் இயற்கை வழியாகிய மேல் நோக்கும் வழியைத் தேடவேண்டு மென்றும் அறிந்து அவ்வறிவு கொண்டு அச்செடி தன் தொழிலை நடத்திக் கொள்ளுகிறது. பூமியில் செடி உறுதியாய் நிற்பதற்கு வேர் ஆதாரமாயிருக்கின்றது. அஃதாவது வேர் பல கிளைகளாகப் பிரிந்து நுண்ணியவேர்களாகிப் பூமிக்குமேல் அது கொம்பும் கிளையு மாகி எவ்வளவு விசாலமாகி வருகின்றதோ அவ்விதமாக வேர்களும் பெரிதும் சிறிதுமாகப் பின்னல்போல் பரவுகின்றன. வேர்கள் குழாய்களின் மூலமாக ஜலத்தை யுண்டு செடிகளது வளர்ச்சிக்கு வேண்டிய இடங்களில் அந்நீரைப் பரவச்செய்து அதற்கு ஊட்டங் கொடுக்கின்றது. ஜலத்தில் பூமியிலுள்ள திரவியங்கள் கரைந்து அவைகளின் மூலமாய்ச செடியின் அபிவிருத்திக்கு வேண்டிய உரங் கள் அமைந்த திரவியங்கள் உண்பிக்கப்படுகின்றன. சில மரங்கள்

400-அடி 500-அடி வரை வளர்கின்றன. அவற்றின் சிகரங்களில் இலைகளும் புஷ்பங்களும் உண்டாகின்றன. பூமியிலுள்ள வேர்களின் வழியாய் உரமுதலிய சத்துக்கள் அவ்விலைகளில் போய்ச்சேருகின்றன. இது பூமியின் ஆகர்ஷண சக்திக்கு மாறாக ஏறிப்போகுந் தன்மையைப் பார்த்தால் சூக்ஷுமமாயிருக்கின்ற உயிரின் சத்தியானது இத்தன்மையதென்று ஒருவாறு உணரலாகும். வேர்களின் குழாய்கள் தொடர்ச்சியான துவாரங்கள் உடையனவல்ல. ஆனால் இடையிடையே பலகணுக்களுடையனவாக அமைந்து மூடப்பட்டிருக்கிறது. அம்மூடியை ஊடுருவிப் பாய்ந்து செல்லுகிறது. இம்மாதிரியாக ஜலம் போய்க்கொண்டிருக்கையில் சிற்சில இடங்களில் மேலேறாமல் ஜலம் தடைப்பட்டுச் சில நாள் தங்கியிருந்து அக்காலத்தில் சிறிது சிறிதாய்ச் சுண்டிப்போகவே அதிற் கலந்த கனப்பொருள்கள் சாதாரண கல்லுருவாகவும் ஸ்படிகங்களாகவும் ஆகிவிடுகின்றன. இதனாலே தான் நாம் மரத்தின் நடுவில் கல்லைக்காணுகிறோம். பெரும்பான்மை தோதகத்தி மரத்திலும் சிறுபான்மை தேக்கிலும் வேங்கை முதலிய மற்றை மரங்களிலும் இக்கற்களைக் காணலாம். மூங்கிலிலும் கரும்பிலும் முத்து இருப்பதாக நம்மவர் கூறுவது இவ்விதமாக உண்டாகும் ஸ்படிகங்களே, இவை நிற்க.

வேர்கள் ஆணிவேரென்றும் நுட்பமான பக்கவேர்களென்றும் இருவகையாம். புஷ்பிக்கிற செடிகளை இரட்டைப்பருப்புள்ளவைகளென்றும் ஒற்றைப்பருப்புள்ளவைகளென்றும் முன் ஒரு சஞ்சிகையிற் கூறியிருக்கின்றோம். பெரும்பான்மை ஒற்றைப்பருப்புள்ளவைகள் முற்றிலும் பக்கவேருள்ளவைகளாகவும் இரட்டைப் பருப்புள்ள வித்தமைந்த செடிகள் ஆணிவேரும் பக்கவேர்களுமுள்ளவைகளாகவு மிருக்கும். முந்தியதற்குத் திருஷ்டாந்தம் மூங்கில், நாணல், தென்னை, பனை, கமுகு, வாழை, நெல்வர்க்கம் முதலியன. பிந்தியதற்கு உதாரணம் ஆல், மா, பலா, புளி முதலிய மரங்களும் அவரை துவரை முதலிய செடிவர்க்கங்களுமே. முக்கியமாய் ஆணிவேரின் பிரயோஜனம் யாதெனில் மரஞ்செடிகள் ஸ்திரமாய் நிற்குந் தன்மையை ஏற்படுத்துவது; பக்கவேர்களின் பிரயோஜனம் உணவு முதலியவைகளை மரங்களுக்கு ஜலரூபமாக ஊட்டுவது.

பெரும்பான்மையாய் வித்துக்கள் பூமியின்கண் போடப்பட்டு வேர்விட்டு பூமியின் உள்நுழைந்து பரவுகின்றன. சிறுபான்மை வித்துக்கள் வேறுசெடிகளிலும் கொடிகளிலும் மரங்களிலும் பக்ஷிகள் மூலமாயும் காற்றின் மூலமாயும் ஜலத்தின் மூலமாயும் மற்றைப் பிராணிகள் மூலமாயும் கொணரப்பட்டு இடப்படுகின்றன. அவை அங்கேதங்கி வேரூன்றி அச்செடிகளின் சத்தை ஆகர்ஷித்து அவைகளுக்குற்ற மரஞ்செடிகளாக உண்டாகின்றன. இவைகளைப் பொதுவாய்ப் புல்லுருவி யென்று சொல்வார்கள். பனையில் அத்தி, ஆல், அரசு வேம்பு முதலியன உண்டாவதைக் காண்கிறோம்.

வேர்களின் சத்தி:—மெல்லியவேரானது நுண்ணியதுவாரங்களில் நுழைந்து சொற்பம் சொற்பமாய்ப் பெருத்துக்கெட்டியான பாறைகளைத்தகர்த்துச் சில சமயத்தில் பாறைகளை உயரத்தூக்கியும் வைக்கிறது.

"நெட்டிருப்புப் பாறைக்கு நெக்குவிடாப்பாறை பசுமரத்தின்,
வேருக்கு நெக்குவிடும்."

என்ற மூதாட்டியின் மொழியை நாம் அறிவோம். இதனுல் நாம் ஒரு நல்லபடிப்பினை அறிந்து கொள்ளலாம். அஃதென்னவெனில் நுட்ப சரீரமுடையவர்களும் விடா முயற்சியால் பெருத்த காரியங்களையும் சாதிக்கவல்லவராவார்களென்பதே.

வேர்களுக்குப் பல நிறங்களுண்டு. அவைகள் அவ்வாறிருக்க ஒரு நோக்கமுண்டு. அஃதென்னவெனில் தன்னை அபாயத்தினின்றும் காத்துக்கொள்வதே. அது ஆக்கம் பக்கத்திலுள்ள மண்நிறமாக இருந்தால் மிருகங்களாலும் பூச்சி புழுக்களாலும் அவைகளுக்குத் தீங்குநேரா. இல்லாமல் வேறு நிறமாக இருக்கும்பக்ஷத்தில் அவ்வர்ணங்கள் மிருகங்களின் கண்களைக்கவர்ந்து அவற்ருல் அச்செடிகளுக்குப் பெருந்தீங்கு நேரிடும்.

வேர்கள் அடியிலுண்டாகாமல் கிளைகளிலிருந்து உண்டாகிற விருக்ஷங்களுமுள. அத்தி, ஆல் முதலிய விருக்ஷங்கள் இவைகளுக்கு முக்கிய உதாரணங்கள். நீர்வளம் நிலவளமுள்ள பூமிகளில் ஒரே ஆலமரம் வெகுதூரம் பரவியிருப்பதைப்பார்க்கலாம். முக்கியக்ஷே

த்திரமாகிய கயாவில் இப்போதிருக்கப்பட்ட வடவிருக்ஷம் (ஆலமரம்) எத்தனையோ வருஷங்களுக்கு முன்னிருந்த வடவிருக்ஷத்தினுடைய வர்க்கத்தின் கிளையாயிருக்கிறது. ஒரு தாய்மரத்தைச்சுற்றிப்பல வீழ்துகளிறங்கித் தாய்மரமின்னது என்று கண்டுபிடிக்கமுடியாமற்செய்துவிடும். ஒரேமரம் பலமரங்கள்போலவும் காணப்படும். பொன்சீந்தும் அவ்வாறே. இதனைக்கொண்டே வம்சாவிருக்ஷம் என்ற தொடர் வழங்குகிறதுபோலும். பூஷணி பரங்கி முதலியவை தாயை வளர்த்து அபிவிருத்தியாக்குகின்றன. ஆகாசக்கிழங்கு காற்றிலேயே வேர்விட்டுக் கொடிவிட்டு வளர்கிறது. குழித்தாமரை என்ற பூண்டு ஜலத்தில் சிறுவேர்விட்டு ஜலத்தைச்சாப்பிட்டு வளர்கின்றது. சில செடிகளுக்கு இலையிலேயே வேருண்டாகின்றன. அவ்விலைகளைப்பறித்து மண்ணில்நட்டால் வேர்விட்டு இலைகள் புதுச்செடிகளாகும். வில்வவிருக்ஷத்தின் வேர் வெகுதூரம்பரவும். அதனால் தான் சில இடங்களில் மரங்களைப் பூராவாகவும் வெட்டின பிறகும் விருக்ஷங்கள் உண்டாகின்றன. இதற்குக்காரணம் வேரிலுண்டாவதே. சூனியத்திலிருந்து ஒன்றும் உண்டாவதில்லை யன்றோ? மதுரை ஜில்லா தென்கரை க்ஷேத்திரத்தில் வில்வம் எங்குமுண்டாவதற்குக்காரணமிதுவே. வில்வாரண்யக்ஷேத்திரமென்று அதைக் கூறுவதுண்டு. இன்னும் எத்தனையோ அற்புதங்கள் இருக்கின்றன. ஜீவ சிருஷ்டியின் மகிமையை எவர்தான் முற்றிலும் அறியக்கூடும். நாம் ஜீவ சிருஷ்டிப்பொருள்களை ஆய்ந்தறிய அறிய அவற்றைப்படைத்த சிருஷ்டி கர்த்தாவைப்பற்றியும் மேன்மேலும் நமக்குக்கம்பீரமான எண்ணம் உண்டாகுமென்பது திண்ணம்.

ப. நாராயணையர்.

தேச சஞ்சாரம்.

—:o:—

தேச சஞ்சாரத்தில் அநேக ஆச்சரியமான விஷயங்கள் மனிதர்களுக்குத் தெரியவரும். பல தேசநடத்தைகளும், ஆங்காங்குள்ள மனிதர்களின் குணங்களும், நீர் நிலை முதலிய பூமி சமுத்திரங்களும், ஸஸ்யவர்க்கங்களின் தன்மையும் நன்றாய் அறியலாம். அநேகந்

தேசங்களைப் பார்த்து வருவதனால் ஆயுள் விருத்திப்படும். பிரயாணத்தினால் உண்டாகும் சந்தோஷமும், அந்த அந்தப்பிரதேசங்களிலிருக்கும் விசித்திரங்களைப் பார்ப்பதினால் ஆனந்தமும், மனதில் நிறைந்து அறிவைப்பெருக்கும். சவுக்கியமும், அதிகரிக்கும். புத்திசாலியாயும், ஆரோக்கியவானாயும், சுகுண முள்ளவனாயும், சாந்தரூபியாயுமுள்ள ஒரு மனிதன் தேச சஞ்சாரியாவானாகில், அவனுக்குத்தோன்றாத எண்ணங்களெல்லாம் தோன்றும். "தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு" என்றபடி, ஒவ்வொருதேசத்திலும் வெவ்வேறு பாஷைகள் வழங்கும். அவ்வத்தேசத்தார்களின் ஆசாரஸ்நானபானாதிகளைக் கண்டால்நமக்கு ஆச்சரியமுண்டாகிறது. அஃதுடன் நமது அறிவு அபிவிர்த்தியடைவதோடு ஆயுள்விர்த்தியும் ஆரோக்கிய பாக்கியமும் சித்திக்கும். பகவானுடைய செயல்களையும், லோக சிருஷ்டியின் அற்புதங்களையும், அதன் சவுந்தரியங்களையும். நாம் கண்டறியக் கூடாததா யிருக்கின்றன பற்பல விஷயங்களையும், நன்குணரலாம். லோகாநுபவமும், உலக வியவகார ஞானமும் உண்டாகும். வியாபாரியா யிருக்குமொருவன் செய்யும் தேச சஞ்சாரத்தால், இன்ன இடத்தில் இன்ன சரக்குகள் விற்பனையாகும், இன்ன சரக்குக்கள் கிடைக்கும் என்பதையுணர்ந்து கொள்ளுகிறான். அவற்றால் அவன் செய்யும் வர்த்தகமும் அபிவிர்த்தியடைகிறது. இதற்கு நம்மையாளும் ஆங்கிலேயர்களையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, ஒவ்வொருவரும் அவகாசமிருக்கும்பொழுது தேச சஞ்சாரம் செய்யச் செல்வதும், ஆங்காங்குள்ள ஆச்சரிய வஸ்துக்களையும், விசேஷங்களையும் ஸாஸனங்களையும், இந்த ஊருக்கு இந்தப்பெயர் ஏன்உண்டாயிற்றென்பதையும், அதன் பூர்விகநிலைமையினையும், தற்கால ஸ்திதியினையும், எவர்கள் அரசுபுரிந்தவிடம், என்னென்ன அதிசயங்களுண்டென்பதையும், இவைமுதலான விஷயங்களையும் கேள்விகள் கேட்டும் பார்த்தும் சுவதேசத்திற்கு வந்ததும் அவைகளை நமது நாட்டு ஜனங்களும் சிறுவர்களுமறியப்புத்தக ரூபமாய் வெளியிட்டும் பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்தும் சுயநலத்தைப்பாராமல் பரோபகாரத்தில் திருஷ்டிவைத்தும் வருதல்உத்தமர்களின் இலக்ஷணம்.

சுதேசிகள்.

களர் நிலத்தின் தன்மையும் சீர்திருத்தும் விதமும்.

:o:

இந்த இராஜதானியின் அநேக பாகங்களில் வருஷந்தோறும் சிலகாலங்களில் உப்புப்பூத்துச் சற்று வெண்மையாக ஏறக்குறைய உப்புமூடிய நிலங்களைக்காணலாம். அப்போபட்ட நிலத்தை வழக்கமாய்த் தமிழில் ' களர்,' ' அளர்,' ' சவர்,' ' உவர்மண்,' ' உழமண்,' ' சரைமண்,' ' பொட்டல் ' என்றும், தெலுங்கில் ' சவுடு ' என்றும், கோதாவரி ஜில்லாவில் ' கருநெலா ' என்றும், கன்னடத்தில் ' சௌளூ ' என்றும் சொல்லுவார்கள். வடமொழியில் ஊஷர என்று பெயர். வட இந்தியாவில் ' ஊசா.'

இந்தப்பெயர்களினால் வழங்கும் நிலத்தைப்பரிசோதிக்குங்கால் செடிகளும் பயிர்களும் தாங்கக்கூடிய அளவுக்குமேற்பட்ட சிலவித உப்புக்கள் அதில் அடங்கி இருப்பதைக்காணலாம். அதனால் பயிர் வளர்ச்சி குன்றியாகிலும் முற்றுமில்லாமலாகிலும் போகிறது. நிலமும் அநேகமாய் புற்பூண்டன்றி வெறுமையாயிருக்கிறது. இவ்வகைக்கெடுதியை விளைவிக்கும் உப்புக்கள் மூன்றுவிதப்படும். அவைகள் பற்பல அளவிற்கலந்திருக்கும். சாப்பிடும் சாதாரண உப்பு 1, மிருதுவாகும்படி துவரம்பருப்புடன் நன்றாக வேவதற்காக கடையில் விற்கும் சோடாஉப்பு 2, ஜனங்களுக்குத்தெரியாத சோடாக்கந்தகமென்று சொல்லக்கூடிய உப்பு 3, இந்த உப்புக்களெல்லாந் தண்ணீரில் இலகுவாய்க் கரையுமாகையால் அவைகளிருக்கும் நிலமுழுதும் இலேசாய்ப் பரவும். எந்தப்பாறைகளிலிருந்து அந்நிலங்களின் மண் உண்டாயிற்றோ அந்தப் பாறைகளிலிருந்தாவது அந்நிலங்களுக்கு அடியிலிருக்கும் பாறைகளிலிருந்தாவது அவைகள் உற்பத்தியாகின்றன. தண்ணீர் பாய்ச்சுவதினால் நிலத்தின் கீழிருந்த உப்பு மேலே வருமாகையால் தரையின்மேல் உப்பு அதிகப்பட்டாலும் இதனால் அபூர்வமாய்த்தான் நிலத்தில் உப்பு அநேகமாக மிகுதியாகிறது. மேற்சொல்லிய மூன்றுவித உப்பில் கடையில் விற்குஞ் சோடா அதிக கெடுதலையும் சோடாக்கந்தக உப்பு சொற்பக்கெடுதலையும் விளைவிக்கும். மண்ணின் நிறையில் 500ல் ஒரு பங்கு சோடா உப்பு இருந்தால் நிலம் கெட்ட அளர் நிலமாகிவிடும், ஆனால் 500ல் இரு

பங்கு சோடாக் கந்தகமிருந்தாலும் நிலத்துக்குக் கெடுதலில்லை. சோடா உப்புள்ள நிலத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் சில இடங்களிற் கிடைக்கக்கூடிய (Gypsum) ஜிப்சமென்னும் ஓர் தாதுவர்க்கத்தைச்சேர்ப்பதினால் சோடாஉப்பு சோடாக்கந்தக உப்பாகி நிலம் விருத்தியடையும்.

மேற்கண்ட கெடுதலை விளைவிக்கும் உப்புக்களன்றி, வேறுசில உப்புக்கள் பயிர் உண்டாக்க ஒவ்வொரு நிலத்திற்கும் அவசியம். நிலஞ்செழிப்பாக வேண்டுமானால் தண்ணீரில் கரையக்கூடிய எல்லாவித உப்புக்களிலும் மொத்தத்தில் 1000-க்கு 5 பாகத்துக்குமேலிருக்கக்கூடாது. கரையக்கூடிய உப்பு மிகுதியாயிருக்கில் அவைகளின் அளவுக்குந் தன்மைக்குந் தக்கபடி அநேகமாய் பூமி பலந்தராது. மேற்படி உப்புக்களின் மிகுதியால் கெடுதல் உண்டாகும்விதம் யாதெனில் உப்புக்கள் செடியிலிருந்து ஜலத்தை இழுத்துக்கொள்ளுவதினால் செடிகள் வாடிப்பட்டுப்போகும். சாதாரண சோடாவும் ஒருவிதமாகக் கெடுதல்செய்யும். எப்படியென்றால், நிலத்திலுள்ள அழுகிப்போன ஜீவதாபரவஸ்துவைக் கரைத்துக் கறுப்பாக்குகிறது. மேலும் நிலத்தில் பெய்யும் மழையையும் அதற்குப்பாய்ச்சும் தண்ணீரையும் பிரவேசிக்கவொட்டாமல் செய்யும். இந்தக் கறுப்பான வஸ்து ஒரு நிலத்தில் அதிகமாயிருக்கின் அதைத் தமிழில் ‘ஊளைக் களர்’ என்றும், தெலுங்கில் ‘குக்கசவுடு’ என்றுஞ் சொல்வார்கள். இந்நிலத்தின்பேரில் வெகுதூரம் நடந்தால் காலில் மிகுந்த எரிச்சலுண்டாகும்.

ஆனால் சொற்ப சாதாரண சோடாவுஞ் சற்று மிகுதியான சோடா கந்தகமுமுள்ள நிலம் வெண்மையாயிருக்கும். அதில் பொதுவாய்ச் சற்று வளர்ச்சியில் குன்றினதாய்ப் பயிர் உண்டாகும். களரினால் சொற்ப கெடுதலடையும் கேழ்வரகும் மற்றுஞ் சில செடிகளும் சாதாரண காலங்களில் அற்ப பலனையும் மிகுந்த மழையுண்டான காலத்தில் நல்ல பலனையுந்தரும். இவ்வித நிலங்களைத் தமிழில் ‘பால் களர்’ என்றும், தெலுங்கில் ‘பால்சவடு’ என்றுஞ் சொல்லுவார்கள். இந்த இராஜதானியில் பருத்தி உண்டாகும் கரிசல் நிலம் பெரும்பான்மையும் சற்றுக் களராயிருக்கும். அது தமிழில்

'சவர் எரங்காடு' அல்லது 'பொட்டல்' என்றும், தெலுங்கில் 'சவுடிரேகடா' என்றும் வழங்கும். இவ்விதமான கரிசல் நிலத்தை கடினமாயிருத்தலாலும் ஈரத்தில் வழுக்குகிற சுபாவமிருத்தலாலும் அறியலாம். அசல் கரிசல் நிலமோ மிருதுவாயும் ஈரத்தில் நடப்பவர்களின் கால்கள் ஆழத்தில் பதியத்தக்கதாயுமிருக்கும். இந்நிலத்தைத் தமிழில் 'சுவய ஈரங்காடு' என்றும் தெலுங்கில் 'கிருஷ்ணரேகடா' என்றுஞ்சொல்லுவார்கள். இதில் மிகுந்த மழையுண்டான வருஷங்களில பருத்தி, சோளம், அவுரி, முதலிய பயிர் நன்ருய் விளையும்.

சிவப்பு நிறமுள்ள களர் நிலம் தமிழில் 'செங்களர்' என்றுசொல்லப்படும். சிவப்பு நிறங்கொடுக்கும் இரும்புத்துருவானது களிமண்ணைப்போலும் கடையில் விற்கும் சாதாரண சோடா உப்பைப்போலும் நிலத்திலுள்ள அணுக்களை ஒன்ருய்ச்சேர்க்கும். ஆதலால் சிவப்புக் களிமண் களர் பூமியைச் சீர்திருத்துவது கடினம்.

கெட்ட களர் நிலத்தைப்பற்றி தெலுங்கில்,

'களர் நிலத்தில் விதைத்தால் காளான்தான் உண்டாகும்'

'களர் நிலத்தில் விதைத்த பயிரும் ஜலமில்லாத ஏரியும் பலன் தராது' என்றும், தமிழில்,

'களர் நிலத்திலிட்ட விதையும் சமரிடத்திற் சென்றசேனையும் இரண்டாம் பட்சம்'

'களர் நிலத்தில் உழாதே, கடும்படையில் போகாதே'

என்றும், பழமொழிகள் வழங்குகின்றன.

ஆனல் சுமாரான களர் பூமியைப்பற்றி,

'களர் உழுதவன் ஆண்டான்
மணல் உழுதவன் மாண்டான்'

'களரை நம்பித் தாழ்ந்தவனுமில்லை
மணலை நம்பி வாழ்ந்தவனுமில்லை'

'களர் நிலத்தில் கரும்புவை'

என்றும் பழமொழிகள் வழங்குகின்றன.

களர் நிலம் உண்டாகும் விதம் :—நீலகிரி, வயனாடு போன்ற உயர்ந்த இடங்களில் களர் நிலமுண்டாகிறதாகத் தோற்றவில்லை. இந்த இடங்களில் உஷ்ணம் குறைவானதால் நிலத்திலுள்ள ஈரம் நன்றாய் உலர்ந்துபோகிறதில்லை. மேற்குக்கரை ஓரத்தில் வருஷமுழுவதும் மழை நூறு அங்குலத்துக்குமேல் அநேகமாய் அடிக்கடி பெய்வதால் தரையிலுள்ள ஈரம் உலருகிறதுமில்லை, உப்புக்கரைந்து மழைஜலத்தில் போய்விடுவதால் நிலத்தில் மிகுதியாய்க்குவிகிறதுமில்லை. ஆகையால் அங்கே கடையில் விற்குஞ்சோடா உப்புள்ள அல்லது சோடாக்கந்தகமுள்ள நிலங்கிடையாது. ஆனால் சமுத்திரக்கரையிலுள்ள நிலங்களில் மழையினாலும் குடாக்கடல் முதலியவற்றின் வெள்ளத்தாலும் சாதாரண உப்பு மிகுதியாய்க் கொண்டுவரப்படும்.

களர் நிலத்தின் இயல்பான குணங்கள் :—எல்லாக்களர் பூமியும், (விசேஷமாய்ச் சாதாரண சோடா உப்பு அதிகமாயுள்ள பூமியும்) தண்ணீர் இறங்கக்கூடாதபடி கடினமான தன்மையையுடையது. மழைக்காலத்தில் சோடா உப்புத்தவிர மற்ற உப்புக்கள் கரைந்து தரைக்குக் கீழ் சொற்ப ஆழம்வரை இறங்கும். ஆனால் மழைவிட்டு குளிர்ச்சியான டிசம்பர் ஜனவரி மாதத்தில் தரை உலரத்துவக்கும் பொழுது அவ்வுப்புக்கள் தரையின்பேரில் எழும்பிப் பொங்குகின்றன. இதை வட இந்தியாவில் 'ரே' (Reh) என்று சொல்லுவார்கள். அப்பொழுது உண்டாகும் உப்புப் பொருக்கை தமிழர் 'பூநீர்' என்று சொல்லுவார்கள். சில இடங்களில் இது விற்பதற்காக சேகரிக்கப்படும்.

களர் பூமியில் நன்றாய் விளைவிக்கக்கூடிய பயிர்கள் :—தானியவர்க்கத்தில், கேழ்வரகும் குதிரைவாலியும் கொஞ்சக்களருள்ள பூமியில் நன்றாய்விளையும். காராமணிவர்க்கம் தானியவர்க்கத்தைக் காட்டிலும் களரினால் வருந்தும். விருட்சங்களுக்குள் தென்னை, கரு[illegible]ம், பலசமரம், இலந்தை, சவுக்கு, பனை, வேறு சில்மரங்களும் [illegible]சம் உப்பைபத்தாங்கும். அல்லது சட்டை செய்யாமல் வள[illegible]

நெல்வகையில்

மோசனம் ... ... வடஆர்க்காடு, செங்[illegible]

காடைக்கழுத்தான் ... } திருநெல்வேலியிலும்,
வெள்ளரிக்கிராவி ... }
வெள்ளைக்கட்டை ... மதுரையிலும்,
தேவராயன் சம்பா ... கோயமுத்தூரிலும் சாகுபடி செய்யத்தக்கவை.

களர் நிலத்தைச் சீர்திருத்தும் விதங்களாவன :—

(1) நிலத்தைச்சுற்றி வேலிகட்டி ஆடுமாடுகள் மேய்வதைத் தடுத்தல்.

(2) அதிக தழை எரு அல்லது புல் பூண்டு மடிந்த இந்திரிய வஸ்துவைச் சேர்த்தல்.

(3) அழுகிப்போகுங்கால் பலமானபுளிப்புண்டாகும்இந்திரிய வஸ்துவைப் பிரயோகித்தல்.

(4) மண்கலத்தல்.

(5) உப்புக்களைக் கழுவிவிடுதல்.

(6) களரை விரும்பும் செடிகளை வளர்த்தல்.

(7) நிலத்திலுள்ள சோடா உப்பை சோடாக்கந்தக உப்பாக மாற்றுதல்.

களர்நிலத்தில் ஓர் சிறு பாகத்தைச்சுற்றி வேலிகட்டிச் சிலகாலம் ஆடுமாடுகளை மேயவிடாதிருப்பதினாலேயே நிலம் படிப்படியாய் விருத்தியாகி முதலில் தோன்றிய சொற்ப புற்பூண்டுகள் நிலமுழுமையும் மெள்ளமெள்ளப் பரவுமென்பதை சமுசாரிகள் பொதுவாத் தெரிந்துகொள்ளாதிருப்பது ஆச்சரியம். பயிர்களின் வேர்கள் நிலத்தை கிளறுவதினால் நிலத்தின்பேரிலுள்ள ஜலம் காய்ந்து போவதைத் தடுத்துக் களர் மேலெழும்புவதை நிறுத்துகிறது. புற்பூண்டு மேன்மேலுந் தாராளமாயுண்டாகின்றன.

...ற்காட்டிய இரண்டாம் நிலத்தின்கீழ் ஏறக்குறைய தமிழ் ...திலும் வரகு வைக்கோலை உபயோகித்தலைச் சொல்ல ... நிலத்தை விர்த்திபண்ண எவ்வகைப் பருத்தித்தழை ...திரியவஸ்துவையும் பிரயோகிக்கலாம். அது நிலத்தை

த்திறந்து (வேனா) மூடிவைக்கும் அழுகிய வைக்கோலைப்போல்) மேலிருக்கும் ஈரத்தைக் காய்ந்துபோகாதபடிசெய்து உப்பைத்தரையின்மேல் ஏறவிடாது. வரகுவைக்கோல் களர் பூமிக்குக் கைகண்ட மாற்றென்பது சந்தேகமாயிருந்தாலும் மாடுகள் தின்ன உதவாதாகையாலும் இலகுவாய்க் கிடைப்பதினாலும் அது உரமாய் உபயோகிக்கப்படுகிறது. இது நல்ல பலனைத்தருவதால் களர் பூமியை சீர்திருத்தத் தக்கதென்று நினைக்கிறார்கள். கோதாவரி, கிருஷ்ணாவிலுள்ள நீர் சூழ்ந்த இடங்களில் களர் பூமியை விருத்திபண்ணும்படி நெல் வைக்கோலைப்போட்டு உழுகிறார்கள். தமிழில் கொளுஞ்சி என்றும் தெலுங்கில் வெம்பலி ஆக்கு என்றும் சொல்லப்படும் காட்டு அவுரி, வேம்பு, ஆவிரை இவைகளின் இலைகளையும் விராலித்தழை, குன்னித்தழை, பனையோலை, எள்ளுத்தாள், நெல்தகரை வைக்கோல் முதலிய தாவர வஸ்துக்களையும் ஏராளமாய் உபயோகிப்பதனால் களர்பூமி விர்த்தியாகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் பழையபனை ஓலைக்கூரையைத் துண்டுதுண்டாக வெட்டிச்சாதாரணமாகக் களர்நிலத்தில் உபயோகிக்கிறார்கள். மதுரைஜில்லாவிலுள்ள சிவகெங்கையிலும் மற்ற இடங்களிலும் களர் நிலத்தில் (கோயமுத்தூரில் சட்டிகெரியென்று சொல்லப்படும்) நெல்தகரை அடர்த்தியாய் விதைத்துக் கதிர் அறுத்த உடன் பயிரை உழுதுவிடுகிறார்கள். கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் சாதாரண சோற்றுக்கற்றாழை அப்படி உபயோகப்படுகிறது. 'களர் முறிக்க வேப்பந்தழை' என்னும் பழமொழிப்படி வேப்பிலை நல்லது.

மேற்கண்ட 3-வது விதத்தில் (1) பிரண்டை (தெலுங்கில் நல்லேரு கன்னடத்தில் மங்குருலி) (2) கள்ளி (3) வேப்பம் புண்ணாக்கு (4) புளியஞ்செடி (5) கம்பு நெல் முதலிய தானியத்தின் சாவி ஒருவேளை (6) தோல்ஷாப்புக் கழிவு திராவகம்ஆகிய இவைகளைச் சேர்க்லாம்.

பிரண்டைக்குக் களரை முறிக்குங்குணம் உண்டென்பது தமிழ்நாடு முழுமையும் 'களர்கெட பிரண்டை புதை' என்னும் பழமொழியால் தெரியும்.

இக்குணம் பல்லாரியிலும் கடப்பையிலும் சுமாராய்த்தெரியும். ஆனால் கர்நூலிலும் 'நல்லேரு என்பது களர் நிலத்திற்கு மாற்றென்பது தெரியாதிருப்பது ஆச்சரியம்.

வடக்கே தெலுங்கு தேசங்களில் களர் நிலத்துக்குப் பாச்சாங்கள்ளி மாற்றென்பது தெரியாதிருந்தும் வினுகொண்டா பச்சை. சுப்பய்யா என்பவர் கள்ளிவேலியிலிருந்து உதிர்ந்த இலைகளைச்சேர்த்து பிரயோகித்ததினால் தன்னுடைய களர் நிலத்தை விர்த்திசெய்தார். இந்த இராஜதானி முழுவதும வேப்பம்புண்ணாக்கு களர் நிலத்துக்குக் கைகண்ட மாற்றென்பது தெரிந்திருக்கிறது. அதைக்குறித்து 'ஒரு கலவிதை நிலம் உவற்றை மாற்றிட ஆறு பல வேப்பம்புண்ணாக்கை விதையுடனிடு' என்னும் ஓர் பழமொழி தமிழ்நாட்டில் வழங்குகிறது. அஃதாவது ஒருகல நெல்விதைக்கக் கூடிய களர் நிலத்தில் 6 பலம் ($\frac{1}{2}$ பவுண்டு) வேப்பம்புண்ணாக்கை விதைக்குங்காலத்தில் உபயோகிக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

புளியம்விதையை நெருக்கமாய் விதைத்து முளை எழும்பின உடன் செடிகளை உழுதுவிடவேண்டும்.

திருநெல்வேலிக்கடுத்த தச்சநல்லூரில் சாராயம் வடிக்குமிடத்திலுள்ள கழிவுகளை இலாபத்துடன் களர் நிலத்தில் உபயோகிக்கிறார்கள். அநேகமாய் எவ்விதமாகவாவது தாபரவஸ்துக்களைக் களர் நிலத்தில் மிகுதியாய் உபயோகிப்பதினால் பலனுண்டாகும். அவைகள் நிலத்தைக் கிளறிச் செழிப்பாக்கும்.

4-வது விதத்தின்கீழ் ஏரியின் வண்டல், மணல், கிணறுவெட்டுவதிற் கிடைக்கும் (மைக்கா என்னும்) அப்பிரக சம்பந்தமான மண் ஆகிய இவைகளின் பிரயோகங்களைச்சொல்லலாம். கோயமுத்தூருக்குச் சமீபத்திலுள்ள தெலுங்குபாளையத்தில் ஒரு சமுசாரி 1 ஏகரா 12 செண்டுள்ள சர்வே நம்பர் 300 உள்ள வயலில் 100 வண்டி மணலை 1901ம் வருஷம் உபயோகித்தான். முன் 3, 4 சலகை நெல்கண்டது இப்பொழுது 12 சலகைகாண்கிறது. மணலானது நிலத்தைத்திறந்து உப்புமேல்தளாக்குவருவதை தடுக்கிறது. தமிழ் ஜில்லாக்களில் களர் பூமிக்குச் சமீபத்தில் நல்ல செம்மண்ல்

கிடைக்கக்கூடுமானால் அதை உபயோகிக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் சூலூர் என்னுமிடத்தில் கிணறு வெட்டுவதிலெடுக்கப்பட்ட (mica) மைக்காவென்னும் அப்பிரேக் சம்பந்தமான கறுப்பு மண்ணைப் பிரயோகித்துச் சில களர் நிலங்களில் நல்ல் பலனையடைந்திருக்கிறார்கள். நரசராவுபேட்டைத் தாலூகாவில் மிகுதியாய்ச் சாதாரண சோடா உப்பு நிறைந்த கறுப்புநிலத்தில், தாராளமாகப் பருத்தியுண்டாகும் கறுப்பு மண்ணைப் பிரயோகிக்கிறார்கள்.

உப்பைக்கழுவுதல்:—கோதாவரி கிருஷ்ணாவின் நீர்சூழ்ந்த இடத்திலுள்ள சமுசாரிகள் களர் நிலத்தின்பேரில் ஏராளமாய் தண்ணீர் விடுவதினால் உப்புக்கள் கழுவப்பட்டுப்போகின்றன. இப்பழக்கத்தை அநுசரித்து ஜலவரிப்பிரமாணம் ஏற்பட்டிருக்கிறது.

கெடுதியான உப்புக்களைக் குறைந்த கெடுதியுள்ளவைகள் ஆக்குதல்:—இவ்விதத்தினால் களர் நிலத்தை விர்த்திபண்ணுவதைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறது. என்னவென்றால் சாதாரண சோடா உப்பு மிகுதியாயிருக்கும் நிலத்தில் (Gypsum) ஜிப்சம் என்னும் ஓர் வகைக்கல்லை அல்லது தாதுவை எருவாக உபயோகிப்பதினால் சோடா உப்பின் கெட்டகுணம் வெகுவாகக்குறைந்து ஜலம் உட்புகாதபடி கடினமாயிருக்கும் பூமியைத்திறந்து இளகச்செய்யும்.

கிருஷ்ணா கோதாவரி ஜில்லாவின் சிலவிடங்களில் பாத்தி மண்ணு அல்லதுகிராமநத்தமண்ணைக் களர் பூமியில் உபயோகித்து நல்ல பலனை அடைகிறார்கள். சாமலகாட்டு அப்பு சித்தாராமசுவாமியென்னும் ஒருவர் இரவில் மாட்டுக்கிடை வைத்திருந்த ஓரிடத்தில் மண்ணைச்சேர்த்து 1901ளு த்தில் 1 ஏகராவுக்கு 200 வண்டிபாரம் விகிதம் தன்னுடைய களர் நிலத்தில் உபயோகித்தார். நிலம் அதினால் அதிக விர்த்தியடைந்திருக்கிறது.

தால்பர் என்பவர் தன்னுடைய சர்வகலை அகராதி 380ம் பக்கத்தில் "களருக்கு முதல்தரமான மாற்றுச்சுவர்களிலுள்ள பழங்காரையின்பேரிலாவது, சிமைச்சுண்ணாம்பும் இந்திரியவஸ்துவுமுள்ள பூமியின்மேலாவது காணப்படும் பொங்கிய உப்பு" என்றுசொல்லுகிறார். மேலும் களர் நிலத்தை விர்த்திபண்ண ஈரமண்ணையாவது

'சிக்ஞ' (chikna) களரையாவது பயிரிடும் சுதேசிகள் வழக்கமாய்ப் பிரயோகிக்கிறார்களென்றும் சொல்லுகிறார். களர் நிலத்தை விர்த்திசெய்வதற்குச் சுண்ணும்பு சம்பந்தமான வெடி உப்பு வர்க்கத்தின் பிரயோகத்தைக் களாக்குறித்து ஏற்படுத்திய தருமகர்த்தர் சபையிலொருவராகிய டாக்டர் பிரவுன் (Dr. Brown) என்பவர் சுட்டிச் சொல்லியிருக்கிறார். பொடி பண்ணிய (kankar) சுக்கானுடன் மாட்டுச்சாணியைக் கலந்து வெடி உப்பாகும்வரை வைத்திருக்கவும் சொல்லுகிறார்.

களரை விர்த்திபண்ணக்கூடிய தோல்ஷாப்புக்கழிவிலுள்ள நல்ல சக்தி அதிலுற்பத்தியாகும் நைட்ரேட்டென்னும் சுண்ணும்பிலிருக்கலாம்.

இந்த இராஜதானியின் கடலோரத்திலுள்ள சாதாரண உப்பு நிறைந்த நிலத்தைச்சுற்றிக் குடாக்கடலிலிருந்து உவர் நீர் வராதபடி உயர்ந்த அணைகளைக் கட்டிச் சுத்தஜலத்தைப் பெருக்குகிறார்கள். அதனால் நிலமானது மிகுதியான உப்பினால் கெடுதியடையாத கள்ளிக்கோட்டை 'ஓரிப்பாண்டியன்' மசூலிப்பட்டணத்து 'பின்னதிராகாட' இவைகளைப் போன்ற சில நெற்களை சாகுபடி செய்யப்பக்குவமாகிறது.

1904-ம் ஆகஸ்டு 8வ. கெஜட்டு.

வைத்தியம்.

[முன் தொடர்ச்சி]

மாந்தக்குளிகை.

கிராம்பு, அதிமதுரம், திப்பிலி, மிளகு, ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வெள்ளைப்பூண்டு, செங்கத்தரிப்பட்டை, (சூரியப்பட்டை) மால்தேவிக்கிழங்கு, கோரைக்கிழங்கு வகைக்கு வராகனெடை 1, இவற்றைத் தனித்தனியே பொன்னிறமாய் வறுத்துவைத்துக்கொள்ளுக. பிறகு, ஒரு புதிய மண்பாண்டத்தில் ஒரு எலுமிச்சங்காயளவு பொடுதலையும் இரண்டு வராகனெடை உப்பையும் போட்டு மெதுவாய் வறுத்து உப்புப்பொரிந்தவுடன் ஒரு வள்ளம் எருமைமோரை அதனுள் வார்த்து எரித்து ஒருசிரங்கையளவாய்ச் சுண்டக்காய்ச்சி வடித்து மேற்சொன்ன மருந்துகளைக் கல்வத்தி

விட்டு இம்மோர்க் கஷாயத்தால் நன்றாயரைத்துக் கல்வத்தோடேயே நிழலிலுலர்த்தவும். அடுத்தநாள் அம்மருந்தை, பருத்தியிலைச்சாறு, பீர்க்கிலைச்சாறு, கோழியாவிரையிலைச்சாறு, அவரையிலைச்சாறு, காட்டு மொச்சையிலைச்சாறு சுரையிலைச்சாறு, எருமுட்டைப்பீநாறியிலைச்சாறு ஆகிய இச்சாறுகளால் தனித்தனியே ஒவ்வொரு சாமமரைத்துப்பின், 4 பலம் வெங்கயத்தைச் சிவக்க வறுத்து, 2 படி தண்ணீருளிட்டு குழம்பாகும்வரை காய்ச்சி வடித்து இக்குழம்பால் மெழுகு போலாகும்வரை யரைத்துப் பருத்திவிதை யளவு குளிகையாக உருட்டி நிழலிலுலர்த்திக்கொள்ளவேண்டியது.

கீழே கண்ட வியாதிகட்கு அந்தந்த அநுப்பானங்களில் ஒவ்வொரு குளிகை கொடுக்கவும்.

காய்ச்சல் வெதுப்பு — துளசியிலைச்சாறு.

வலிப்பு மாந்தம்	வேலிப்பருத்தியிலைச்சாறு. இதில் ஒரு குளிகையை உட்கொள்ளக்கொடுத்து, புளியஞ்சிறாயை ஒழுங்கான தரையிலெரித்துச் சாம்பலைத்தள்ளி அந்த நிலத்தில் வேலிப்பருத்தியிலை ரசமும் கோழிமுட்டைக்கருவையுங் கலந்தூற்றிக் கொதித்தடங்கினவுடன் குழைத்து உடம்பெங்குந் துவளையிடவும்.

வாந்தியோடு வயிற்றுக்கழிச்சல் — முலைப்பால்.

பட்சிதோஷம்:—இதின் குணம், தாகம் மஞ்சள்நிறமலம் இருமல்.	நண்டு வளையில் நிற்குந்தண்ணீர்.
துளிமுட்டுத்தோஷம்:—இதின் குணம், ஸ்மரணையின்மை கண்திறவாமை உடல் நாற்றம்.	குழந்தைகளைப் புதைக்கும் மயானபூமியில் முளைத்த அறுகம்புல்லைத் தண்ணீர் விட்டரைத்து அதில் ஒரு குளிகையை உரைத்துக் கொடுக்கவும்.
ஊதுமாந்தம்:— குணம், சப்தமாய் அபானவாய்வு பரிதல் வயிறு போதல்.	கொழிஞ்சியிலைச் சாற்றில், சுக்கு, மிளகு, ஓமம் இவற்றை வெதுப்பிப் பொடித்து, 2 பணவெடை தூளிட்டு ஒரு குளிகையுங் கொடுக்கவும்.
வெக்கை வேதுப்பு:—குணம், வாய்வெண்மை நிறமடையும் உடல் வெதும்பும்.	மணித்தக்காளியிலை ரசம்.
மலம்பச்சையாயுந்துண்டுகளாயும் தண்ணீராயும் கழியும் கண்மயிர் சிலும்பி யிருக்கும் கண் சொருகும் தாகமெடுக்கும்.	கிழவன்பட்டை, அத்தித்தழை, நாய்ப்பாகலிலை, வசம்பு வெள்ளுள்ளி இவற்றைச் சிறுக எடுத்து அரைத்து 2 பங்காக்கி ஒருபங்கில் குளிகையைக்கலந்து வார்க்கவும். மற்றப்பங்கை ஒரு துணியில் முடிந்து குழந்தை கையில் கட்டவும்.

பசுங்குளி முட்டுத்தோஷத்தின்குணம்:— வயிற்றில் பலவிதமாய்ப் பேதிகாணும், வாந்திபண்ணும், கண்சொருகும், விளிக்கும், மயங்கும், தண்ணீரா அவாவும்.

காணப்பூட்டின் இலை, அவரைத்தழை, உள்ளி வசம்பு, இவைகளைத்தட்டி சாறுபிழிந்து கொஞ்சஞ் சாற்றில் 1 குளிகையைக் கொடுத்து மீதிச்சாற்றை உடம்பிற் பூசுக.

மாந்தத்தின் குணம்:— வெண்ணிற மலம் தாகம் வெயர்வை வெதுப்பு.

சீந்திற்றண்டை, வெந்நீர், வெள்ளாட்டு நெய், பால் இம்மூன்றிலொன்றை விட்டரைத்துப்பிழிந்துஇதில்ஒருகுளிகைவார்க்கவும்

இவையன்றி யின்னும் அனேக ரோகங்கட்கு ஏற்ற அநுப்பானங்களில் இக்குளிகையைப் பிரயோகித்தால் நல்ல குணங்காணலாம்.

தாளிசபத்திரிச்சூரணம். (சிறியது)

தாளிசபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், ஓமம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கிராம்பு இவைகளை யோர் நிறையா யெடுத்து இளவறுப்பாய் வறுத்துச்சூரணித்திடைக்குச் சரி கள்ளிக்கோட்டைச் சர்க்கரை கலந்து புதிய மண்பாண்டத்தில் வைத்துக்கொள்ளவும்.

அளவும் உபயோகமும்:—வேளைக்கு வெருகடியளவு சூரணத்தை யெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட்டுவரவேண்டும். காலை மாலையாகிய இருவேளையும் 12 நாட் கொள்ளவும்.

தீரும் வியாதிகள்:—வயிற்றின் பலபாகங்களிலும் வியாபித்து உபாதிக்கும் வாய்வு, கிறுகிறுப்போடு வாந்தி முதலிய தொந்தரையைக் கொடுக்கும் பித்தம், அக்கினிமாந்தம் இவை குணமாகும்.

அஸ்திசுரத்திற்கு மோரெண்ணெய்.

பசுமோர்படி 3, நல்லெண்ணெய்படி 1, ஒன்றாய்க்கலந்து, இதில் கோஷ்டம், அதிமதுரம், தேவதாரம், மரமஞ்சள், விலாமிச்சவேர், வெட்டுவேர், கடுகுரோகணி, கடல்நுரை, செவ்வள்ளிக்கொடி, சுக்கு, மிளகு, ஓமம் சீரகம், சாதிக்காய், அபின் இவை வகைக்கு வராகனெடை 4, கோரைக்கிழங்கு, நன்னறிவேர், சீதாசெங்கழுநீர்க்கிழங்கு, குறிஞ்சான்வேர், சிற்றாமுட்டிவேர்; சீந்திற்றண்டு, இவை வகைக்குப்பலம் $\frac{1}{4}$ (வ). எல்லாவற்றையும் ஒன்றாயிடித்து வெள்ளாட்டுமோர் விட்டு நன்றாயரைத்து முன் கூட்டிற்கரைத்து எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கால்மண்டலந் தானிய புடத்தில் வைத்து எடுத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—நெடுநாட் சுரத்தாற் பீடிக்கப்பட்டவர்களது அருசி மெலிவு இவற்றோடு முக்கியமாய் அஸ்தியில்பற்றிய சுரம் அலுப்பு முதலியவைகளும் நீங்கும்.

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி
நெகமம் போஸ்டு, பொள்ளாச்சிதாலூக்,

சமாசாரக்கொத்து.

மூங்கிலால் செய்யப்பட்ட சாமான்கள் பார்வைக்கு அழகாயிருக்கின்றன பூச்சிகள் தொளைத்துச்சீக்கிரம் உளுத்துப்போவதால் திடீரென்று சிலசமயங்களில் முறிந்துபோகின்றன. ஆனால் ரங்கூன் எண்ணெயில் அதை நனைத்துவிட்டால் இவ்விதக்கேடுகள் ஒன்றும் உண்டாவதில்லையாம்.

* * *

முற்றுகை நடக்குங்காலங்களில் கடிதப்போக்கு வரவுக்கு புறாக்களைத் தூதாராகப்பழக்கி உபயோகிக்கிறார்களென்பது உலகப்பிரசித்தம். ஊர்க்குருவியையும் இம்மாதிரித் தொழிலுக்குப் பழக்கியிருப்பதாகத் தெரியவருகிறது. எல்பா தீவுக்குச்சமீபத்தில் ஒரு குருவியின்காலில் ஒருதுண்டுக்கடிதம் கட்டப்பட்டிருந்ததை விளக்குத்தண்டுக்காரன் கண்டு அக்குருவியைப் பிடித்து அக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்ததில் அஃது ஒரு கைதியால் எழுதப்பட்டதென்று தெரியவந்தது. 1885-ம்வரு முதல் நாளிதுவரை 20 வருஷகாலமாக அவன் சிறைச்சாலையில் அடைபட்டிருந்ததாகவும் அக்கடிதத்தை அரசனுக்கு அல்லது மந்திரிக்கு அனுப்பும்படியாகவும் எழுதியிருந்தது. அவன் வேண்டுகோள் நிறைவேறியதாம். காகத்தின்கழுத்தில் ஓலைகட்டி விடுகிறது என்று சொல்லுகிற வழக்கம் வாஸ்தவமாக வந்துவிட்டது. ஊர்க்குருவி சாதாரணமாக மணியொன்றுக்கு 72 மைல் பறக்கிறதாகக் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

* * *

தஞ்சைஜில்லா திருவிடைமருதூர் தெற்குமாடவீதியிலிருக்கும் சுப்பாசாரியார் என்பவருக்குப் பாம்பு முதலிய விஷஜந்துக்களால் கடியுண்டவர்களின் ஜாதி, வயது, பெயர் இவைகளைத் தந்தி மூலமாகத் தெரிவித்தால் அவர் அங்கிருந்தபடியே மந்திரித்து விஷத்தை இறக்கிவிடுகிறாராம்.

அமெரிக்காவில் மிஸ்டர் டியூக் என்ற ஒரு புகையிலை வியாபாரி ஒரு வீசை புகையிலை வைத்து ஆதியில் வியாபாரம்செய்து வந்து கடைசியில் சாகும் போது 60 கோடி ரூபாசொத்துக் காரராயிருந்தனர். புத்தியுடன் ஊக்கமும் அதிர்ஷ்டமும் வாய்த்தால் எவனும் அல்ப ஆரம்பக்ஷேமகா என்று முன்னுக்கு வரத்தடையில்லை.

* * *

ஓர் அபூர்வப்பிறப்பு:—திண்டிவனம்தாலூகா துரைப்பட்டிக்கிராமத்தில் ஒரு வன்னிய ஸ்திரிக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு கால்கள் நான்கு. கைகள் நான்கு. உடல் ஒன்று. வலப்புறம் பார்வையாய் ஒருசிரசும் இடப்புறம் பார்வையாய் ஒருசிரசுமிருக்கின்றனவாம். இது கலிகாலப்புதுமைபோலும்.

* * *

மலையாளம்ஜில்லாவில் ஒருபரிசோதனை மிளகுத்தோட்டம் ஏற்படுத்தும் பொருட்டு சென்னைக்கவர்ன்மெண்டார் 76 ஏகர் நிலம்வாங்க உத்தரவு செய்துவிட்டார்கள். இப்பண்ணை இது தாலிப்ப்ரப்புக்கு வடகிழக்கே 3 மைல் தூரத்திலுள்ள குட்டூரில் வைக்கப்படுமாம்.

* * *

அடுத்த டிசம்பர் மாதம் காசிமகாக்ஷேத்திரத்தில் நடக்கும் காங்கிரஸ் மகாஸபைக்கு ஸர். குருதாஸ் பானர்ஜியை அக்கிராசனாதிபதி யாகக்கோரப்போகிறதாகக்கேள்விப்படுகிறோம். இவர் நியமனம் எவர்க்கும் திருப்தியை விளைவிக்குமென்பதிற்றடையில்லை.

* * *

திருநெல்வேலி ஜில்லாவின் தெற்கேயுள்ள திருக்குறுங்குடிமடத்து ஸ்ரீபேரருளாள ராமாநுஜஜீயர் சுவாமிகள் சென்னைக்காட்சி சாலைக்கு விலைமதிக்கத்தக்கதோர் கற்றூண் உபகரித்திருக்கின்றனர். இந்தத்தூணின் விசேஷம் யாதெனின் இதில் பண்டைப்பாண்டியர்காலத்து வட்ட எழுத்தில் சில தமிழ்வாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. புராதனச் சிலாசாஸன ஆராய்ச்சிக்காரருக்கு இந்தத் தூண் மிகப்பயன்படத்தக்கது.

* * *

இந்தியாவில் யந்திரஉபயோகததினால் சுரங்கத்தொழிலை மிகவும் விருத்திசெய்யலாம். இப்பொழுது இந்தியா முழுவதிலும் நிலக்கரிவெட்டும் யந்திரங்கள் இரண்டிடங்களில்மட்டுமே உபயோகமுறுகின்றன. ஐரோப்பிய அமெரிக்காச் சுரங்கவேலைக்காரர்களைப் பார்க்கிலும் இந்திய சுரங்கவேலைக்கா

ரர்கள் மிகவும் சுலபமான சம்பளத்துக்ககப்படும்வண்ணம் பலஇளைஞர் பிற நாடுகளுக்குச்சென்று சுரங்கத்தொழில் பயிலுவாராயின் அதனால் பெருநன்மை விளையும்.

* * *

கிறிஸ்துவமதக்குருவாகிய போப்புக்கு வருஷத்தில் 6-இலக்ஷம் பவுன் வரும்படி வருகிறதாம்.

* * *

ஸார்சக்கிரவர்த்தியின் பூஸ்திதியின் விஸ்தீரணம் 10-கோடி ஏக்கராவாம். இங்கிலாந்தைவிட மூன்றுபங்கு பெரிதாம்.

* * *

பக்ஷிகள் பூமியின் சமதரையினின்று 13,135-அடி உயரந்தான் பறக்கச் சக்தியுடையனவாயிருக்கின்றனவென்று பாட்லூனிஸ் என்பவர் கூறுகிறார்.

* * *

ஆட்டிடையர்கள் ஆட்டின்மேலிருக்கின்ற ரோமத்தைத் தவறாமல் சீதோஷ்ணஸ்திதியைக்காட்டும் கருவியாக (Barometer) நம்புகிறார்கள். ஆட்டின்ரோமம் எவ்வளவுக்கெவ்வளவு சுருண்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு காலசுபாவம் ரம்மியமாயிருக்குமாம்.

* * *

மிஸ்டர் ஆண்ட்ரூகார்னகி என்ற அமெரிக்கக் கோடீசுவரப் பிரபு யுனைடெட்ஸ்டேட்ஸ், கனடா, நியூபவுண்டுலண்டு இவைகளிலுள்ள யூனிவர்ஸிடி, டெக்னிகல் பள்ளிக்கூடங்கள் இவைகளிலுள்ள தேர்ச்சியடைந்த உபாத்தியாயர்களுக்கு 20-லக்ஷம் பவுன் பென்ஷன் கொடுக்கும்பொருட்டு நன்கொடையாக அளித்திருக்கிறார். மிஸ்டர் கார்னகியினுடைய மொத்த நன்கொடை 24,270,000-பவுனும். இதன்றோ உத்தமக்கொடை.

* * *

வங்காளத்தில் சணல் யந்திரங்கள் 22 உண்டு. இவற்றிற்கு முதல் 4 கோடி ரூபா ஆகிறது.

* * *

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் சண்டைநின்றபாடில்லை. அமெரிக்கா ஐக்கியமாகாணத்துப் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் முதலியோர் மேற்கூறிய இரண்டு தேசங்களுக்கும் சமாதானம் செய்துவைக்கவேண்டியதே தமது முக்கியமான கடமையென்று அபிப்பிராயப்படுகிறார்கள். சமாதானவிதிகளும் இருதிறத்தாரும் கூறியிருக்கின்றனர். ஜப்பான்விதிகளை ருஷியா முற்றிலும் ஒப்புக்கொள்ளாது என்று எண்ணப்படுகிறது. எப்படியாமோ என்று உலகத்தார் எல்லோரும் சாதகபக்ஷிபோல் எதிர்நோக்கிநிற்கிறார்கள்.

காபூலின் இந்து அரசாட்சி.

தற்காலத்திய காபூல்ராச்சியத்தைச்சார்ந்த நாட்டிற்கு காந்தார் என்று பெயர் வழங்கிவருகின்றது. காந்தார் என்பது காந்தாரி தேசம் என்ற திரிபே. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் கலகம் நடந்துகொண்டிருந்த காலத்தில் இந்தியாவிலுள்ள ஆரியர்கள் காந்தாரதேசத்தில் அரசாட்சி செய்துவந்தனர். ஆரியர்கள் காந்தாரதேசத்தின் அரசாட்சியை, எவ்வண்ணமிழக்க நேரிட்டதென் பதைப்பற்றியும், அவர்களின் பின்னர் இன்னவம்சத்தார் அரசாண்டா ரென்பதைப்பற்றியும் அறியச்சரித்திர சம்பந்தமான உண்மை நமக்கெட்டவில்லை. என்றாலும் கி. மு. ஆறு அல்லது ஏழாவது நூற்றாண்டில் ஆரியர்கள் சிந்துநதிக்கரைக்கு மேற்கிலுள்ள நாட்டை யிழந்தார்கள் என்பதைமட்டும் நிதானிக்காலாம். கி. மு. ஆறும் நூற்றாண்டில் பாரசீகதேசத்தரசனாகிய டெரையஸ் என்பவன் இந்தியாவின் மேற்கெல்லை வரையிலுள்ள நாடுகளை ஜெயித்தனன்.

கி. மு. 327ல் மாஸிடோனியாவின் கீர்த்திபெற்ற அரசனாகிய மகாஅலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து, பஞ்சாப்பில் கிரேக்கியர் அதிகாரத்தை நிலைநிறுத்தினான். ஆனால் ஆரியவர்த்த அரசனாகிய பெயர்பெற்ற சந்திரகுப்தன் கிரேக்கர்களை இந்தியாவை விட்டகற்றி, கொஞ்சகாலம்வரையிலும், அவனுடைய சீரான அதிகாரமென்னுஞ் சுவாலையானது, கிரேக்கர்களின் உன்னதபதவியென்னும் பனிக்கட்டி ஸ்தம்பங்களை கரையச்செய்தது. இத்தருணத்தில் பாக்டிரியாவில் ஒரு தனிமையான கிரேக்குராச்சியம் உன்னதஸ்தானத்திலிருந்தது. சந்திரகுப்தன் என்றும்மீளாத தூக்கத்திலிருந்தபொழுது கடைசியாகச்சொன்ன கிரேக்கர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து பஞ்சாப்பிலும் அதற்கப்பாலுமிருக்கிற ஜில்லாக்களில் சிறியதும் பெரியதுமான அனேக ராச்சியங்களை ஸ்தாபித்தார்கள்.

கி. மு. 120-ல் பாக்ட்டிரியர்கள் அதிக துர்ப்பலமடையவே துருக்கிலிருந்த உச்சிவம்சத்தார் இதுவே நல்லதருணமென்று அறிந்து அவர்களுடைய ராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இவ்வம்சத்தார்களிலொருவனாகிய ஹாபிஸ்கா என்பவன் காபூலில் அமர்ந்து அரசுபுரிவானாயினான். சிறிது காலத்திற்குள் அவ்வரசனுக்குக் கெட்டதசையணுகவே, அவனுடைய எதிரிகள் ராச்சியத்தின் மீது படையெடுத்து, அவனைக் காபூலிலிருந்து துரத்திவிட்டார்கள். சின்னாட்கழிந்த பின்னர் அவனுக்கு நல்லதிர்ஷ்டம் மறுபடியும் உண்டாகத் தன்பால் விசுவாசமாயிருந்த சிலரைச் சேர்த்துக் கொண்டு காபூலின்மீது படையெடுத்துச்சென்று ஜெயித்து ஓர் நூதன ராச்சியத்தை அவ்விடம் ஸ்தாபித்தான். அவன் பின் வந்தோர்கள் ஹஸ்கா, கானிஷ்கா என்பவர்கள் யாராலும் மதிக்கும்படி காஷ்மீரத்தில் சிறிது காலம் ஆட்சி புரிந்தனர். இன்னோரனைவரும் கி. பி. முதல் நூற்றாண்டில் மிக்க செல்வமுற்றிருந்தோராவர்.

கானிஸ்கா. கி. பி. 78-ல் சிங்காதனம் ஏறினான். அவன்மிக்க பராக்கிரமசாலி. காபூல், பெஷாவர், பஞ்சாப்பு, காஷ்மீரம் இவைகளனைத்துக்கும் சுற்றியுள்ள பள்ளத்தாக்கு நிலங்கள் அவனுடைய ராஜ்ஜியத்துக்குச் சேர்ந்தவையென்று பிரசித்திபெற்ற சீனதேசத்து சரித்திரக்காரராகிய "ஹயூன் தஸாங்கு" என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வரசனது ராச்சியமானது, காபூல் தார்க்காண்டிலிருந்து ஆக்ரா, குஜராத்து வரைக்கும் வியாபித்திருந்ததென்று சரித்திரத்தினால் நமக்குத்தெரியவருகிறது. அவ்வரசன் (ஜம்பூதீபாதிபதி) அல்லது ஜம்புதீபத்திற்குச் சக்கரவர்த்தியென்ற பட்டம் வகித்தனன். உச்சிவம்சத்தரசர்கள் இன்ன சமயத்தோரென்று கொள்ளுவதற்கு நமக்கு வேண்டிய ஆதரவுகள் கிடையா. இவ்வரசன் தன் ஆளுகையின் அந்தத்தில் பௌத்தமதத்தைக்கொண்டு அதைப்பரவச்செய்வதற்கு வேண்டிய அனேக சாதனங்களைத் தேடுகையில் மிக்க உன்னதநிலையிலிருந்த பிராமண சமயமானது நசித்துப்போகும் போலிருந்தது.

இவன் இறந்துபோக இவனுடைய பெரிய ராச்சியம் சிதறுண்டு ... ப் உச்சிவம்சம் நீடித்தகாலம் காபூலில்நிலைத்திருந்தது. இவனுக்குப் பின் இடைவிடாமல் 60 அரசர்கள் அரசாண்டார்கள் என்று, ...ல்பிர்மிசொல்லுகிறார். ஒவ்வொரு அரசனுஞ் சராசரி ஆண்டது 13-வருடம் ஆனால் அவர்களனைவரும் 780-வருஷம் அரசாண்டதாக

வெளிப்படுகிறது. கானிஷ்கன் பட்டத்திற்கு வந்தது கி. பி. 78-ம் ஆண்டு. அஃதாவது கணக்கிடின் 858-ஆகிறது (780+78) இதனுடன் இப்புராதனவம்சம் முடிவுபெற்றது.

இவ்வம்சத்தில் கடைசியாக அரசாண்டவன் பெயர் கானக்கு அல்லது காடர்மான். இவ்வரசன் விவேகமுடையோனல்லனாகலின் காலர் என்ற மந்திரி சொன்னபடி நடப்பவனாயினன். இவ்வமைச்சன் பிராமணகுணசீலன்; ராஜங்க சட்டதிட்டங்கள் அனைத்தையும் இவனே நிரூபணஞ் செய்தனன். இவன் ஜீரணமாயிருந்த தன்னிலத்தினோர்பாகத்தை உத்தாரணஞ் செய்யப்புகுங்கால் அவனுக்கோர் பெருநிதியமகப்பட்டது. அது பின்னுக்கு அவனுக்கு நேரிட்ட ஒவ்வொரு இடையூறுகளையும் வெற்றிகொள்ள வொருசாதனமாயிற்று. கானக்கு அற்பகுணமுடையோனாயிருந்ததுமல்லாமல் குடிகளை வருத்துங் கொடுங்கோல் அரசனுமாயினன். அன்னோனது கொடுமை சகிக்கலாற்றாத குடிகள் அமைச்சனிடமேகி நீயே கதியென்று சரணமடைய, அம்மதிவலோன் அவ்வரசனை யணைந்தோர்க்கு வேண்டுவன கொடுத்துத் தன்வசமாக்கிக்கொண்டு, வேந்தனை விலங்கிட்டுச் சிறையில் வைத்தனன். பின்னர் இம்மந்திரி தானே ராச்சியத்தை ஆளப் பேரவாக்கொண்டிருந்தவனாகையால் தனதெண்ணத்தைக் காலதாமதமின்றி நிறைவேற்றிக் கொண்டனன். சின்னாட் கழிந்தபின்னர் தானே அரசனாயினான்.

இவன் மூப்படைந்து இறந்த பிறகு சாமந்தன், கமலன், பீமன், ஜெயபாலன் அனங்கபாலன், 2-வது ஜெயபாலன், பீமபாலன், என முறையே பல மன்னர்கள் வெற்றியுடன் அரசாட்சி புரிந்தனர். இந்த நூதனவம்சத்து அரசர்களில் யூபாலன் தான் கடைசியாய் ஆட்சிபுரிந்தவன். காபூலின்கண் ராஜரீகம் வகித்த இந்து அரசர்கள் நற்குணம், உண்மை, தெய்வபக்தி, நல்லொழுக்கம் இவைமுதலா[illegible] குணங்கள் எப்போதும் பொருந்தியவர்களென்று ஆல்பிர்மி என்[illegible] வரைந்திருக்கின்றனர்.

பல்லடம், 29—7—05. M. ராகவேந்திராச்சார்.
ஸ்கூல் உபாத்தியாய

சைவபரிபாஷை.

---:o:---

(240-ம் பக்கத்தொடர்ச்சி).

அது லௌகிகமென்றும், வைதீகமென்றும், இரண்டுவிதமாம். "ஆற்றின்கரையின் ஐந்து பலங்களிருக்கின்றன" என்பது முதலானவை லௌகிக வாக்கியம்.

பரமாப்தரான ஸ்ரீமத் சதாசிவருடைய வாக்கியம் வைதீக வாக்கியம்; அது வேதமெனவும், சைவாகமமெனவும் இரண்டுவிதமாம். வேதவாக்கியம் பிரசித்தம். சைவாகமமாவது சுலோகம். ஆகையால் வேதசிவாகமமிரண்டும் பரமாப்தரான சதாசிவன் செய்தருளினமையால் அவைவயே உண்மை விளக்கும் வாக்யங்களாம்.

சங்கை:—வேதங்களைப் பிரவசனஞ்செய்தவரின்னாரென்றுதகரிக்கப் பெறுமையாலும், புருஷனாற் செய்யப்படாமையாலும், நித்தியமாகையாலும், பெரியோரங்கீகரித்தமையாலும் அவை பிரமாணமென்றதொக்கும். ஆகமங்களவற்றிற்கு மாறாயிருப்பதாலும், வேதமார்க்கத்தில் தப்பினவர்களுக்குத் தந்திரமார்க்கத்தில் பிரதேசமென்று தந்திரானுஷ்டானத்தில் தோஷஞ் சொல்லுகையாலும் ஆகமமெப்படிப் பிரமாணமாகுமென்னில்.

உத்தரம்:—வேதத்திற்கு மூலமின்மையாலது பிரமாணமென்பையாகில் அது கூடாது. வேதஸ்வரூபம் நித்தியமா? வேதஸ்ரூபம் சப்த மயமாதலால் உச்சரிக்கப்பட்டுண்டாகின்றமையால் பிரத்தியக்ஷமாகவே அநித்தியமென்று காணப்படுகின்றமையால் ஸ்வரூபநிச்சயமென்பது கூடாது. பிரவாக நித்தியமென்பது ஓதிவைக்கின்றவன் ஓதிக்கொள்பவர் முறையேவழுவாமல் வரவேண்டும். பிரபஞ்சம் பிறப்பிறப்புள்ளதாகையால் வேதமும் அதற்குட்பட்டதாகையால் பிரவாகநித்திய மென்பதுங்கூடாது. ஆகையால் நித்தியராய் நிர்மலராய் சர்வஞ்ஞராய் பக்ஷபாதமில்லாதவராய் அவ்வியராய் பரிபூரணராய் ஸ்வதந்திரராய் பசுபாசவிமோசகராய் பரமாப்தராயிருக்கிற பரமேசுவரராலேயே செய்யப்பட்ட படியினாலே வேதமும்

ஆகமமும் பிரமாணமாகுமென்க. வேதம் ஸ்வயம்பு நித்தியமென்கையால் அதற்கு உற்பத்திநாசமெப்படியென்னில் அப்படியல்ல; ஸ்வயம்புவான பரமாப்த பரமசிவனாலே செய்யப்பட்டமையால் காரணோபசாரத்தாலே ஸ்வயம்புவென்றது. பிரளயம் வரையிலிருப்பதாலே நித்தியம் என்றது ஸ்வதந்திரமான ஆகம கர்மாநுஷ்டான வசத்தால் ஜன்மாந்தரத்தில் வைதிக சைவகர்மங்களில் அதிகாரம் சித்திக்கும்பொருட்டும் அசுராதிகளை மயக்கும்பொருட்டும் மற்றும் வேறானவாமாதி ஆகமங்கள் என்னாலேயே செய்யப்பட்டன. ஆகையால் என்னுடைய பத்தர்களான சிஷ்டர்களாலே வேதவிருத்தங்களான ஸ்வதந்திர ஆகமங்கள் அநுசரிக்கத்தக்கன வல்லவென்று சொல்லியிருக்கின்றமையால் அந்தந்த அதிகாரிகளுக்கே அது அது பிரமாணமாகும் எல்லாருக்கும் பிரமாணமல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே காமிகத்திற் சொல்லிய முறையாவது.

சைவாகமமாவது சிரௌதமென்றும், அசிரௌதமென்றும், இரண்டுவிதம். அவற்றுள், வேதசாரமாயிருப்பது சிரௌதம், ஸ்வதந்திரமாயிருப்பது அசிரௌதம். மற்றும் வேதவிருத்தங்களான வேறு சாத்திரங்கள் இவ்வுலகத்தில் மயக்கும் நிமித்தம் சொல்லியபடியிருக்கின்றன. அவை வாமமம், பாசுபதம், வாகுளம், பைரவம் இவையும், மற்றும் வேதத்துக்குட்படாததும் அனுசரிக்கத்தக்கனவல்ல. என்ற இப்படிச் சொல்றியிருக்கின்றமையால் தந்திராநுஷ்டானம் கூடாதென்னுமிடத்தில் வேதவிருத்த தந்திரவிஷயமாகக் கொள்ளல்வேண்டும்.

சங்கை:—ஆகமங்களுக்கு வேறான ரிஷிப்புரோக்தங்களாயும் வேதபுரோக்தங்களாயுமிருக்கும் சாஸ்திரங்களால் ஞானமோக்ஷமுண்டாகிறமையால் அவையே போதுமென்னில் அப்படியன்று; அவற்றில் பிரிருதிக்குட்பட்ட இருபத்துநாலு தத்துவங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. முப்பத்தாறு தத்துவங்களையும் பரமமோக்ஷம் நிரூபிக்கப்படவில்லை. ஒன்றுக்கொன்று விரோதமுமுண்டு.

ஆகையால் சர்வஞ்ஞத்து வாதிகுணமுள்ள பரமேசுவரன் செய்த ஆகமத்தாலேயே ஞானமோக்ஷங்களுண்டாகுமென்பது சித்தம்.

அப்படியே பௌஷ்கரத்தில் சொல்லிய முறையாவது மனிதர் வாக்கியம் ரிஷிவாக்கியத்திற்கு மேற்படாது. ரிஷிவாக்கியம் வேத வாக்கியத்திற்கு மேற்படாது. தேவவாக்கியம் பிரம வாக்கியத்திற்கு மேற் படாது. பிரமவாக்கியம் விஷ்ணு வாக்கியத்திற்கு மேற்படாது, விஷ்ணுவாக்கியம் ருத்திரவாக்கியத்திற்கு மேற்படாது, ருத்திர வாக்கியம் சிவவாக்கியத்திற்கு மேற்படாது. கீழ்ப்பட்டதையெல்லாம் மேற்பட்டது பாதித்துவிடும். சிவாகமத்திற்கு விரோதமின்றி யெல்லாச்சாத்திரங்களுமிருக்க வேண்டியது சிவசாஸ்திரம் வியாபகம். மற்றவை வியாப்பியம்.

ஆகமமே ஆப்தவாக்கியம், பிரத்தியட்ச அநுமானங்களாலே நிச்சயிக்கப்பட்டதையறிந்து சொல்லுகிறவன் ஆப்தன். ஆதலால் பிரசின்னங்களான இந்திரியங்களையுடையவராய், சர்வஞ்ஞராய், பக்ஷபாதமற்றவராய், உண்மையறிந்தவராய், அவியயராய், பரிபூரணராய், ஸ்வதந்திரராய், பசுபாச விமோசகராயிருக்கும் பரமேசுவரரே பரமாப்தர். அவர் வாக்கியமே உண்மை. மேன்மையைக் கொடுக்கும். சிருஷ்டியானவுடனே சுத்தாத்துமாவுக்குரிய விஞ்ஞானகலர்களைத் தமது தேஜஸ் ஸம்பந்தத்தால் அநுக்கிரஹித்து ஞானக்கிரியாசத்தி மிகும்படிசெய்து சதாசிவபகவான் நாதரூபமாயிருந்த அநுபதார்த்தமயமான ஞானத்தை முதலிற் சிவபேதம் பத்தாக்கியுபதேசித்தார். பின்பு ருத்திரபேதம் பதினெட்டாக்கி அவர்களுக்குபதேசித்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விடத்துப் பிரமாணமென்றதால் பிரமாகாணமென்று பொருள்கொண்டு சப்தார்த்தங்கள் அபேதமாயிருப்பதால் சப்த பிரமாணமென்னப்படும். எங்கும் சிற்சத்தியே முக்கியப் பிரமாண மென்று சாதிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியே பௌஷ்கரத்தில் சப்தங்கள் பரம்பரையாகிச் சிவஞானத்தை அநுமித்துக் காட்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பதமென்பது எழுத்துக்களின் கூட்டம். எழுத்துக்கள் நொடியிலழியுமாதல் பொருளைத்தெரிவிக்க வல்லமையில்லை. பொருளைத் தெரிவிக்கு நிமித்தம் எழுத்துக்களில் ஸ்போடமென்னுமோர்

பொருளையங்கீகரிக்கவேண்டியது. இத்தப் பிரகாரம் பிரமாணங்கள் மூன்றென்பது நிச்சயிக்கப்பட்டது. இம்மூன்று பிரமாணங்களிலே யே உபமானமுதலான சகல பிரமாணங்களுக்கும் அடக்கமுண்டாகு மென்றறியத்தக்கது.

எப்படியெண்ணில் அர்த்தாபத்தி யென்பது அநுமானத்திலட ங்கும். ஒவ்வாத பொருளைக் காண்கையால் ஒக்கச்செய்யும் வேறோ ர் பொருளை யேற்படுத்துதல் அருத்தாபத்தி. எப்படி யென்னில் சீவித்துக்கொண்டிருக்கும் தேவதத்தன் வீட்டிலில்லாமையைக்கண் டு வெளியிலிருப்பை யேற்படுத்துதலாகும். ஆகையாலிந்த ஒவ்வா மை பிரியாமையாக முடிகின்றமையால் அதையறிதலா லுண்டாகு மென்பது அநுமானமே. ஒவ்வாமையாவது வெளியிலிருப்பன்றி ஜீவித்திருப்பவனுக்கு வீட்டிலில்லாமை கூடா தென்பதாகும். அ து பிரியாமையே யாகும்.

வீட்டிலில்லாத தேவதத்தன் வெளியிலிருக்கிறான். நூறு வயதுள்ளவனாய் வீட்டிலில்லாமையால். எது இப்படியன்றோ அஃது இப்படியன்று. ஜீவியாத யஞ்ஞதத்தன்போல என்பதாகும்.

உபமானமும் அனுமானமே வேறு பிரமாணமில்லை. எப்படி யென்னில் ஒப்பறிவு உபமானமாகிலது பிரத்தியக்ஷமே. இஃது அ தற்குச் சரியென்று பிரத்தியக்ஷமாகக் காண்கையால் இதற்குச் சரி அது என்னும் ஞானவுபமானமென்னில் அப்பொழுது அஃது இதற் குச்சரி, இதனுடைய ஒப்புண்மையால். எது எதனுடைய ஒப்புள் ளதோ அஃது அதற்கொப்பாகும் என்பது அநுமானமே யாகும்.

சம்பவமென்னும் பிரமாணமாவது ஆயிரத்தில் நூறுண்டென் று நிச்சயமல்லவோ, அஃது ஆயிரம், நூற்றைவிட்டுப் பிரியாது, என் னும் ஞானத்தால் உண்டாகுமாதலால் அனுமானமேயாகும்.

(இன்னும் வரும்.)